

# தூய ஆவியில் பயணம்

2010 ஆவணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியின் பயணம்

**2010 ஆவணி மாதம்**

"உமது விருப்பத்தை தவிர

எனக்கு வேறு எதுவும் இல்லை"

ISSN 1391-5975

வெளியிடுபவர்

*சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்*

கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபத்திற்கு கை கொடுத்தல்

ஆவணி

கிறிஸ்துவர்களான எமக்கு கிறிஸ்த்துவரின் விண்ணேற்பு திருவிழா விசேடமானதாகும். அது கிறிஸ்துநாதரை மரணத்தினின்று உயிர்ப்பிப்பது மாத்திரமல்ல அவருடைய உயிர்த்த உடலுடன் மனிதத்தன்மையுடைய இறை தந்தையின் அரவணைப்புக்கு சென்ற நாளாகும். அதை நாம் மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும்.

கிறிஸ்துநாதா் பரிசுத்த திருத்துவத்தின் இரண்டாம் நபர் அப்பா, தந்தை, இறைவனே தூய ஆவியானவரும் இறைவனே கிறிஸ்துநாதா் பரிசுத்த திருத்துவத்தின் இரண்டாம் இடத்தில் இருக்கின்றபடியால் மனித நிலை இறை நிலையோடு உறவு கொள்வதற்கு வழிவகுத்தார்.

''என் பின்னே வாருங்கள்'' என்று கிறிஸ்துநாதார் எம்மை அழைக்கும் போது எமக்கு அழைப்பு கிடைப்பது எமது சரீரத்திற்கும் பரிசுத்த திருத்துவத்திற்கும் இடம் இருப்பதை குறிக்கவே கிறிஸ்துநாதா் மனித நிலையோடு பிதாவிடம் சென்றது போல் என்றாவாவது எமக்கும் கிறிஸ்துநாதரினுள் எமது சரீரமும் உயிர்த்து பரிசுத்த திருத்துவத்திற்கு உள்ளாகுவதற்கு அழைப்பு இருக்கின்றது. எமது அனுதின வாழ்வினுள் நாம் இறைவனின் மகள், மகன் என்று தியானித்தாலும் எமது அழைப்பு கிறிஸ்து நாதரைப் போல் பிதாவின் அரவணைப்பினுள் செல்வதற்கே. எமது அனுதின வாழ்வில் பிதாவின் அரவணைப்பிற்குள் செல்வதை குறித்து நாம் எவ்வாறு கதைக்கின்றோம். எனது மணித்தியாலத்தில் என்னுடைய செப வாழ்வினுள் இவ்விடத்திற்கு உள்ளாக முடியுமாக இருப்பின் அது எத்தகைய பாக்கியம்.

*அருட்திரு சிறி ஒஸ்கா அடிகளார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 1
ஞாயிறு

*முதலாம் வெளிப்பாடு*
ச. உரை
1:2, 2:21-23

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
90:3-6,12-14, 17

*இரண்டாம் வெளிப்பாடு*
கொலோ.
3:1-5,9-11

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித லூக்கா
12:13-21

பொ. கா. 18ம்
ஞாயிறு

வாழ்க்கைஎன்பது நுனிப்புல் மீது விழுந்த பனிதுளி போன்றதாகும். ஒரு கனத்தில் அது இல்லாது போய்விடும். நாம் இவ்வுலகைசார்ந்தோர் இல்லை.ஏதாவது ஒருநாளில் நாம் மீண்டும் இறைவனுடன் போக வேண்டியவர்கள் ஆவோம். அன்று நாம் எடுத்துச் செல்ல வேண்டியது இவ்வுலகில் செய்தவற்றை மாத்திரமே ஆகும். செல்வம், அதிகாரம் அவற்றோடு இணைந்தவை எமக்கு சதாகால இன்பத்தை தர மாட்டா அதாவது இவ்வுலக இன்பங்கள் எல்லாமே நிரந்தரம் அற்றவையாகும். அனைத்தையும் படைத் தவரோடு நாம் இடைவிடாது தொடர்பு கொண்டவர்களாக இருப்போமேயானால் நாம் எப்போதும் மகிழ்வோடும் விடுதலையோடும் இருப்போம். நாம் மற்றவர்களுடன் சங்கமமாகியவாறு கிறிஸ்து நாதர் வழியாக இறைவனுடன் ஒன்றிக்கின்ற அளவிற்கே எமது வாழ்வு கருத்துள்ளதாக மிளிரும்.

முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

**''வீண், முற்றிலும் வீண் என்கிறார் சபையுரையாளர் வீண் முற்றிலும் வீண், எல்லாமே வீண் ஏன் எனின் ஞானத்தோடும் அறிவாற்றலோடும், திறமையோடும் ஒருவர் உழைக்கிறார். உழைத்து சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவர்க்கு விட்டுச் செல்கின்றார். அவரது உழைப்பும் வீணே. இது பெரிய அநீதி. உலகில் அவர் செய்த எல்லா முயற்சிக்காகவும் வகுத்த செயற்திட்டங் களுக்காகவும் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? வாழ்நாள் எல்லாம் அவருக்கு துன்பம் வேலையில் தொந்தரவு. இரவிலும் அவரது மனதிற்கு அமைதி இல்லை. எல்லாம் வீணே''**

ஒளியில் விழிப்புறுதல்

மேற்படி கூற்று பார்த்த பார்வைக்கு உண்மையான போதிலும் இதனூடாக பயனிக்கின்ற கிறிஸ்தவர்களாகிய எமக்கு பெரியதோர் நற்செய்தியும் இருக்கிறது. **''உலகில் வாழ்ந்தாலும் உலகை சாராதவர்கள்''** இறை அரசுக்காக வேண்டி அனைத்தையும் விசுவாசத்தோடு நிறைவேற்றுவதற்காக இறைவன் எம்மை அழைத்திருக்கின்றார். வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், கலவரங்களுக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்தவாறு பதில் தேடுகின்ற உறவுக்கு உண்மையான விடுதலை, மகிழ்ச்சி கிடைக்காத போது அவர் விரக்தி அடைவார். **''இந்த வாழ்க்கை பிரயோசனமற்றது.''** என்பதே அவரது இறுதி தீர்ப்பாக அமையும் ஆயினும் அனைத்துமே, அனைத்தினதும் ஊற்றாகிய இறைவனை அனுபவிப்பதற்காக இயலுமேயானால், மகிழ்ச்சி, விடுதலை, ஆறுதல் என்பன எமக்கு உரித்தாகும். நிலைத்துள்ளன வற்றின் பெறுமதி பேரில் அவதானத்தைச் செலுத்துகின்ற அளவிற்கே எமது வாழ்வு கருத்துள்ளதாக அமையும். அழிந்து போகின்றவை பேரில் அதிக பற்று கொள்பவன் ஒரு போதும் திருப்தி அடைய மாட்டான்.

பரிசுத்த நற்செய்தியிலிருந்து

**கூட்டத்திலிருந்து ஒருவர் இயேசுவிடம் ''போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக்கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்'' என்றார். அவர் அந்த ஆளை நோக்கி, ''என்னை உங்களுக்கு நடுவராகவோ, பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?'' என்று கேட்டார்.**

**.......... ''எவ்வகை பேராசைக்கும் இடம் கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள் மிகுதியாக உடைமைகளைக் கொண்டிருப்பதால் வாழ்வு வந்து விடாது'' என்றார்.......... செல்வனாயிருந்த ஒருவருடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன் ''நான் என்ன செய்வேன்? என் விளைப்பொருட்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே'' என்று எண்ணினான், என்று சொல்வேன், என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன். அங்கு என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்து வைப்பேன்......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

ஆனால் கடவுள் அவனிடம், ''அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டு பிரிந்து விடும். அப்போது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" என்று கேட்டார். கடவுள் முன்னிலையில் செல்வமில்லாதவராய் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே."

### இறைமகன் பேரில்

இறைத்தகப்பனுடைய அன்பினால் நிரம்பியவராக, அதனை அனைவரோடும், அனைத்தோடும் பகிர்ந்து கொண்ட எம் ஆண்டவர் இயேசு, மனிதப்பிரச்சினைகளுக்கு பதில் அளிக்கின்றார். அவரது பதிலில் வித்தியாசம், வேறுபாடு உண்டு. ஒருபோதும், அவர் தமது தனித் தன்மையை இல்லாமலாக்கி கொண்டார் இல்லை. அவரது ஒரே சொத்து, ''அப்பா தந்தை" மாத்திரமே. அவரிடம் மக்களைத் திரட்டுவதற்கு இறைமகன் எப்போதும் செயற்பட்டார். உவமை, உவமேயம், புதுமை, கதை போன்றன வழியாக மக்களை அண்மித்தவராக அவர்களது பாவங்களை எடுத்துக்காட்டினார். எதனையும் முன்னிட்டு அவர் கலவரப்படவில்லை தந்தையிலேயே தங்கி வாழ்ந்தார். அறிவற்ற செல்வனின் உவமை வழியாக அவர் எமக்கு என்ன கூறுகின்றார்? விழிப்புற்றவர்களாக அவரது ஒளிக்கு செவிமடுப்போம்

நாம் அனேகமானவை பேரில் பற்று கொண்டவர்களாக அவற்றை சேமிப்பதற்காக முனைகின்றோம். ஆயினும், ஒருபோதும் திருப்தியடையமாட்டோம். தியாக மனப்பான்மை எம்மிடம் குறைவாகவே காணப்படுகின்றது. ஆயினும், உரிமைகளை கேட்டு கூக்குரல் இடுகின்றோம். அதற்காக போராடுகின்றோம். உண்மையாகவே எமது கடமைகளை நிறை வேற்றுவதன் பேரில் எந்தளவு விழிப்புள்ளவர்களாக இருக்கின்றோம்? உலகப் பெறுமதிகள் பேரில் நிலைத்தவர்களாக பயணமாகின்ற நாம் எம்மை அறியாமலேயே அவற்றில் அடிமைகளாகின்றோம் அல்லவா? இன்றைய பலாத்காரம், வன்செயல், கொலை, கொள்ளை போன்றவற்றிற்கான காரணம் அதிக பேராசை அல்லவா? மனிதத் தன்மை, சகோதரத்துவம் என்பவற்றை இணங்கானாத சமூகத்தில் வாழ்கின்ற கிறிஸ்தவர்களாகிய எமது பங்களிப்பு, பிரதிச்செயல், சாட்சிப்பகர்தல் எவ்வாறு அமைய வேண்டும்???

### இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

**நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்ப்பெற்று எழுகின்றவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்கு கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். இவ்வுலகில் சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள் ஏனெனில், நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது...... புதிய மனித இயல்பை அணிந்திருக்கின்றீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கியவரின் சாயலுக்கு ஏற்ப புதுப்பிக்கப் படுகின்றது. இவ்வாறு நீங்கள் கடவுளை முழுமையாக அறிய முடியும்.**

### ஒளியில் வழிப்புறுதல்

அனைவருக்கும், அனைத்துமான கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வுக்காக அழைப்பு விடுவிக்கின்ற புனித சின்னப்பர், எமக்கு பரிசாக தரப்பட்டுள்ள புதிய வாழ்வைப் பற்றியும் நினைப்பூட்டுகின்றார். கிறிஸ்துவுக்குள் நாம் அனைவருக்கும் ஒரே விதமானவராவோம். வேறுபாடு எதுவுமில்லை.

### செபம்

தூய ஆவியானவரே, எமது பாவங்களை காட்டி மனம் வருந்துதலின் அனுபவத்திற்கு எம்மை உள்ளாக்கியவாறு, உண்மையை நோக்கி எம்மை எடுத்து சென்றவரும் வாழ்க்கை யதார்த்தத்தின் பேரில் விழிப்புற்றவாறு, ஆண்டவர் எமக்கு வெற்றியாக (பரிசாக) பெற்றுத் தந்துள்ள புத்திரத்தன்மையை உரிமையாக்கிக் கொண்டு அதற்கு சாட்சியளிப்பதற்காக எம்மை வழிநடத்தி யருளும்.........

ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 2
திங்கள்

*முதலாம் வெளிப்பாடு*
எரேமியா
28:1-17

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
119:29,43,79,80
95, 102

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
14:13-21

பொர்செல்லி நகர்
புனித யுசேபியு
புனித பீட்டர்
ஜீலியன் எய்மார்ட்

பரி. நற்செய்தி

**இதைக் கேள்வியுற்ற இயேசு அங்கிருந்து புறப்பட்டு படகிலேறி பாலை நிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். இதைக் கேள்விப்பட்ட திரளான மக்கள் ஊர்களில் இருந்து கால்நடையாக அவரை பின்தொடர்ந்தனர். இயேசு அங்குச் சென்ற போது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள் மீது பரிவுக் கொண்டார். அவர்கள் இடையே உடல் நலம் அற்றிருந்தோரைக் குணமாக்கினார். மாலை பொழுது, சீடர் அவர்களிடம் வந்து, "இவ்விடம் பாலை நிலம் ஆயிற்றே, நேரமும் ஆகிவிட்டது ஊர்களுக்குச் சென்று தங்களுக்குத் தேவையான உணவு வாங்கிக்கொள்ள மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்" என்றனர். இயேசு அவர்களிடம் "அவர்கள் செல்லவேண்டியதில்லை. நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார். ஆனால் அவர்கள் அவரைப்பார்த்து "எங்களிடம் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தவிர வேறு எதுவும் இல்லை" என்றனர். அவர் "அவற்றை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள்" என்றார். மக்களை புற்தரையில் அமருமாறு ஆணையிட்டார்.......**
(முழுமையாகவாசிக்கவும்)

ஒளியில் விழிப்புறுதல்

பெண்களும் குழந்தைகளும் நீங்கலாக உணவு உண்ட ஆண்களின் தொகை ஏறத்தாழ ஐயாயிரம். இந்த வரிகளை வாசிக்கும்போது, வல்லவராம் நல்லவரே இறைவா! உமது வல்லமையை விபரித்திட வார்த்தைகள் இல்லை. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் மக்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பின் வெளிப்பாடு விளங்குகிறது. பலவீனப்பட்டு அல்லாடிக்கொண்டு தவிக்கும் மக்களுக்கு இவ்வேளையில் உடல், உள ஆன்மீக நலன்களை அழிக்கின்றார். விளக்கமாக கூறுவதாயின் வாழ்வு தரும் வார்த்தைகளால் உள்ளத்தையும், அப்பத்தை பல்கிப் பெருகச் செல்வதன் வழியாக உடலையும், பாவத்தின் விளைவான நோய்களை குணப்படுத்துவதன் வழியாக ஆன்மாவையும் போஷிக்கிறார். ஆள் பார்த்து செயல்படாத அவருடைய செயற்பாடு இவ்வன்புச் செயலின் வழியாக அழகாக வெளிப்படுகின்றது. இறைத் தந்தையின் செய்தியை சொல்வதோடு இருந்துவிடாமல் இறை அன்பின் தன்மையை, செயலிலும் காட்டுகிறார் அன்பின் இயேசு.

எமது பக்கம்

எம்மிடமும் எம் ஆண்டவர் எதிர் பார்ப்பது அதனையே, பசித்தவர்களுக்கு உணவு வழங்காமல் துன்பப்படுவோர்க்கு ஆறுதலாக இல்லாமல் நாம் நற்செய்தியை பறைச் சாற்றினாலும் அதில் நிறைவு இல்லை என்பது அன்பு செயல்களின் வழியாக தான் இறைவனைப் பற்றிய செய்தியை நிறைவாக்கிட முடியும். **"உமது விருப்பத்தை தவிர வேறு எதுவும் எனக்கு இல்லை"** என்ற வாக்கியத்திற்கு அமைய வாழ்ந்த இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றும் நாமும் அவ்வாறு வாழவேண்டிய வல்லமையை தூய ஆவியானவரிடம் கேட்போம்.

செபம்

அன்பின் இறைவா! உம்மைப்போல் அனைவரையும் அன்புச் செய்திட எமக்கு வல்லமையைத் தந்தருளும். அளவிட முடியாத உமது அன்பை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளவும் எனக்குத் தந்துள்ள தாலந்துகளை எனக்காக மட்டும் பயன்படுத்தாது, உமது இறையரசிற்காக பயன்படுத்தி இறையரசை கட்டியெழுப்ப உமது வல்லமையை தாரும்.

ஆமென்.

**உமக்கு அஞ்சி நடப்போர் உம் ஒழுங்கு முறைகளைப் பற்றிய அறிவுடையோர் என்பக்கம் திரும்புவாராக! திருப்பாடல் 119 : 79**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 3
செவ்வாய்

முதலாம் வெளியாடு
எரேமியா
30:1-2,12-15,
18-22

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
102 : 15-22,28

நற்செய்தி வெளிப்பாடு
புனித மத்தேயு
14:22-36

பரிநற்செய்தி

இயேசு கூட்டத்தினரை அவ்விடத்தில் இருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அப்போது சீடரையும் உடனே படகேறி தமக்கு முன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப் படுத்தினார். மக்களை அனுப்பிவிட்டு அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின் மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார். அதற்குள் படகு கரையோரத்தில் இருந்து நெடுந்தொலைவில் சென்று விட்டது. மேலும் எதிர் காற்று அடித்து கொண்டு இருந்ததால் அலைகளால் படகு அலைக் கழிக்கப்பட்டது. இரவின் நான்காம் காவல் வேளையில் இயேசு அவர்களை நோக்கி கடல்மீது நடந்து வந்தார். அவர் கடல்மீது நடப்பதை கண்ட சீடர் கலங்கி "ஐயோ, பேய்" என அச்சத்தினால் அலறினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார். "துணிவோடிருங்கள் நான் தான், அஞ்சாதீர்கள்" என்றார்.....

ஒளியில் விழிப்புறுதல்

ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு கற்று கொடுக்கும்போது, பயிற்சி அளிப்பது வழக்கம். அதுபோல கிறிஸ்து தம் சீடருக்கு பயிற்சி அளிக்கின்றார். தம்மைவிட்டு சீடர்களை நெடுந்தொலைவுக்கு அனுப்புகின்றார். எதிர் காற்று வீசும்போது அவர்களது நடவடிக்கையை கவனித்திருப்பார். அவர்களை நாடி வருகின்றார். ஐயமுற்றோருக்கு தைரியத்தை கொடுக்கின்றார். சூழ்நிலைக்குள் சிக்கிய சீடர்கள், கிறிஸ்து அருகில் இருப்பதைக்கூட உணராமல், தமது பயத்தை வெளிப்படுத்துகின்றார்கள். இச்சீடர்களைப்போல் நாமும் சூழ்நிலைகளை மட்டும் நோக்கிய வண்ணம் இருக்கின்றோமா? இச்சூழ்நிலையின் மத்தியில் கிறிஸ்து இருப்பதை காண்கின்றோமா? சிந்திப்போம் எம் கண்களை கிறிஸ்துவில் ஏறெடுப்போம்.

என் அனுபவம்

என் மகளுக்கு திருமணம் பேசி வந்தார்கள் அம்மகனும் என் மகளைப் பார்த்து சம்மதம் என்று கூறிவிட்டு வெளிநாடு சென்று விட்டார். இரு தரப்பினரும் திருமணத்தை நிச்சயம் செய்து கொண்டோம். வெளிநாடுச் சென்ற மகனும் என் மகளுடன் தொலைபேசியில் ஒருமாதம் தொடர்பு கொண்டார். ஆனால் காரணம் இல்லாமல் அம்மகன் திருமணத்தை நிறுத்தும்படி அவரது வீட்டாருக்கு கூறிவிட்டார். அவர்கள் வீட்டார் கலங்கி விட்டார்கள். அதை எங்களிடம் கூறியபோது ஆரம்பத்தில் சிறிது கலக்கமாகவே இருந்தது. அந்நிலையில் கிறிஸ்துவை நோக்கி பார்த்து கிறிஸ்து இன்றைய நற்செய்தியில் கூறியதுபோல், "துணிவோடிருங்கள்" என்று கூறினார். திருமணம் தடை செய்யப் படுவதோ மற்றவர்கள் இதையிட்டு கூறப்போகும் விமர்சனத்தையோ நோக்கவில்லை. இத்திருமணம் நிகழ்ந்து விட்டால் பின்பு என் மகள் ஏதாவது ஆபத்தை சந்திக்கலாம் இதற்காக இறைவன் தடுத்திருக்கலாம் என் இறைவன் எனக்கு நன்மையை மட்டுமே செய்பவர். அத்தோடு நானும் குடும்பத்தாரும் தூய ஆவிக்குள் இருப்பதால் எதற்கும் பயப்பட வில்லை. நடந்த நிகழ்ச்சியையோ சூழ்நிலையையோ நோக்காது கிறிஸ்துவை நோக்கியதால் இந்நிலைக்குள்ளும், அமைதியும், மகிழ்வோடும் இருக்கின்றோம்.

செபம்

உண்மையில் வழிநடத்தும் ஆதவனே! எங்கள் வாழ்வில் இன்பமோ துன்பமோ என்ன நடந்தாலும் உமக்கு நன்றி கூறும் மனநிலையை தந்தமைக்கு நன்றி என்றும் உம் வழியில் வாழ உமது ஜீவ அருளை தாரும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 4
புதன்

*முதலாம் வெளிப்பாடு*
எரேமியா
31 : 1-7

*பதிலுரைப்பாடல்*
எரேமியா
31:10-13

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
15:21-28

புனித ஜோன்
மரி வியான்னி
நினைவு

**புனிதரின் வாழ்க்கையில்**

புனிதர் ஜோன் மரி வியான்னி அடிகளார் பங்குத் தந்தையர்களின் பாது காவலர் ஆவார். இவரது செபம் தவம் அயராத உழைப்பு போன்ற வற்றினால் பல இளைஞர்க ளது வாழ்வு மனமாற்றம் அடைந்தது. ஏறத்தாழ அன்றாட வாழ்வு முந்நூறு பேருக்கு அதிகமானோர் பாவமன்னிப்பை இவரிடம் பெற்று இறைவனுடைய அன்பின் நிலைபெற்று வாழ்ந்தார்கள். தம்மையும். மக்களையும் ஆட்டிப் படைத்த சாத்தானை செபத்தால் தவத்தால் அயரா உழைப்பால் விரட்டி, அனைவரும் இறைவன் அளித்த மீட்பை சுதந்தரித்து வாழ வழி வகுத்தார்.

பரி. நற்செய்தியிலிருந்து

***............சீடர்கள் அவரை அணுகி "தமக்குப் பின்னால் கத்திக் கொண்டு வருகின்றாரே அவரை அனுப்பி விடும்" என வேண்டினார். அவரோ மறுமொழியாக, "இஸ்ராயேல் குலத்தாருள் காணமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்." என்றார். ............ உடனே அப்பெண் "ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையில் இருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டி தின்னுமே." என்றார். இயேசு மறுமொழியாக "அம்மா உமது நம்பிக்கை பெரிது நீர் விரும்பியவாறு உமக்கு நிகழட்டும் என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மக்களின் பிணி நீங்கியது.***

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்புச் சமூகத்தினை படைக்கும் நோக்குடன், தீர் சீதோன் பகுதிகளை நோக்கிச் செல்கையிலே, கானானியபெண் இயேசு ஆண்டவரை சந்திக்கின்றார். அவளின் உள்ளங்களையும் ஊடுருவி அறிகின்ற ஆண்டவர், தம்மை பின் தொடர்ந்தவாறு வரும் பெண்ணை பாராமுகமாக வழிநடந்து சென்றது ஏன்? பெண்ணின் வேண்டுதலை புறக்கணித்தது ஏன்? "**பிள்ளைகளுக்குரிய உணவை நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல**" என்று கூறியது ஏன்? இக்கேள்விகளின் முன் அமைதியுடன் இறைஞானத்தினை வேண்டிக் காத்திருந்தேன்.

கானானிய பெண்ணின் விசுவாச வாழ்வினால், தம் சீடர்களுக்கு பாடம் கற்பிக்க ஆண்டவர் விரும்பினார். என்னத்தான் கூறினாலும், கேவலமாக மதிப்பிட்டாலும், விசுவாசத்தினைக் கைவிட்டு, வழிதவறிச் செல்ல எத்தனிக்காமல் பின் தொடர்ந்து வரும் பெண்ணைப்போல் வாழ உங்களுக்கு முடியுமா? என்பதை வெளிப் படுத்துவதை அறிந்துக் கொண்டேன்.

**எம் பேரில்**

என்னை யாராவது பாரா முகமாக இருக்கையில், என் தேவைகளைப்பற்றி அக்கறைக் கொள்ளாமல் இருக்கையில், எனது அனுபவம் எப்பேர் பட்டதாக இருக்கும். நீ எனக்கு வேண்டியவன் அல்ல. ஏன் நான் உன்னை பின்தொடர வேண்டும் எனும் அகங்காரம் கொண்ட மனநிலை என்னுள் எழாதா? ஆண்டவர் முன் தோன்றி நிற்போம். அன்று சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த தளராத விசுவாசம் என்னிடம் உள்ளதா? எனது அத்தியாவசிய தேவைகள் கூட பின்தள்ளப்பட்ட நிலை எனக்கு ஏற்படலாம். எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், நோய்களைக் கண்டு இவனோடு இறைவன் இருக்கின்றாரா? என்று உலகம் எள்ளி நகையாடும் நிலைக் கூட ஏற்படலாம் இந்நிலையிலும் கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க முடியுமா? அவரை மட்டுமே நோக்கினால் அவர் கூறுவார் மகனே! மகளே! சிலுவையில் தொங்கும் கனம் வரை இவ்வுலகம் என்னை இறைமகனா? என சந்தேகித்தது. நான் உலகத்திற்கு வெளிப்படுத்த முன்வரவில்லை. இறைத்தந்தையே உயிர்ப்பின் மூலமே வெளிப்படுத்தினார். அந்தக் கானானியப் பெண்ணுக்குள்ள விசுவாசம் உன்னிடமிருந்தால் உலக வார்த்தையையிட்டு சோர்வுறாதே. உன் விசுவாசம் தளராத விசுவாசமாயிருக்கட்டும் என்றார். அவரது வார்த்தை என்னைப் பெலப்படுத்தியது.

**வாக்குறுதி**

கன்னிப் பெண்ணாகிய இஸ்ராயேலே! உன்னை நான் மீண்டும் கட்டி எழுப்புவேன். நீயும் கட்டி எழுப்பப்படுவாய். மீண்டும் உன்மேளதாளங்களை நீ எடுத்துக் கொள்வாய் மகிழ்ச்சியுற்றோர் போல, நடனம் ஆடிக்கொண்டு நீ வெளியேறுவாய்
(எரேமியா31:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 5
செவ்வாய்

*முதலாம் வெளிபாடு*
எரேமியா
31:31-34

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
51 : 10 - 13, 16 - 17

*நற்செய்தி வெளிபாடு*
புனித மத்தேயு
16:13-23

புனித கன்னி
மரியாளின்
பேராலய
நேர்த்தளிப்பு

பரிசுத்த நற்செய்தி

**இயேசு பிலிப்புச் செசரியாப் பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ''மானிட மகன் யாரென்று மக்கள் சொல்லுகிறார்கள்'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் ''சிலர் திருமுழுக்கு யோவான் எனவும்........ ஆனால் நீங்கள் நான் யாரென சொல்கிறீர்கள்? என்று அவர் கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக! நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்! என்று உரைத்தார். அதற்கு இயேசு ''யோவானின் மகனே சீமோனே! நீ பேறுபெற்றவன்''.............. எனவே நான் உனக்கு கூறுகிறேன்: உன் பெயர் பேதுரு: இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் காட்டுவேன்:................ பின் நான் மெசியா என்பதை எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று இயேசு சீடரிடம் கண்டிப்பாய் கூறினார்........... ஆனால் இயேசு பேதுருவை திரும்பிப் பார்த்து ''என் கண்முன் நில்லாதே சாத்தானே! நீ எனக்கு தடையாய் இருக்கிறாய்: ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவைப்பற்றியே எண்ணுகிறாய் என்றார்.**

ஒளியின் விழிப்புறுதல்

நித்தம் நித்தம் என்னோடு, எனக்குள் வீற்றிருக்கும் தூய ஆவியானவரே! இந்நற்செய்தியின் ஊடாக எம் ஆண்டவர் இயேசு நாதரின் உள்ளத்தினை நோக்குவதற்கு என்னை வழிநடத்தியருளும். தன்னோடு கூட இருந்த சீடர்களும், எப்பொழுதும் தன்னைப் பின் தொடர்ந்து வரும் மக்களையும் காணும் இயேசு கிறிஸ்து நாதர் அவர்களுடைய உள்ளத்தினை அறிவதற்கு தாகம் கொள்கின்றார். தூய ஆவியானவரும் அவருக்கு உதவி செய்கின்றார். எனவே மானிட மகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள் எனும், கேள்வியை சீடர்களிடம் கேட்டார். அவர்கள் மக்களின் எண்ணத்தினை தெளிவுப்படுத்தி கூறுகின்றனர். ஆயினும் அவ்வார்த்தையில் நிறைவு பெறாத ஆண்டவர், **''நீங்கள் நான் யாரென்று சொல்கிறீர்கள்?''** பரிசுத்த ஆவியால் நிரம்பிய பேதுரு **''நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்''.** இந்தப் பதிலில் ஆனந்தம் அடைந்த இயேசு, ''யோனாவின் மகனான சீமோனே நீ பேறு பெற்றவன்'' என்று வாழ்த்துகின்றார். பேதுருவின் ஞானத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து அறிந்துகொண்ட இயேசு திருச்சபைக்கு தலைவராக ஏற்படுத்துகின்றார். அத்தோடு சகலவிதமான அதிகாரங்களையும் கொடுத்து முழுமையான உரிமையையும் பேதுருவுக்கு கொடுக்கின்றார்.

எம் பேரில்

**''உமது விருப்பத்தை தவிர வேறு எதுவும் எனக்கு இல்லை''** என்று கூறிய மகனானவரை நோக்குவோம். **''நீர் மெசியா கடவுளின் மகன்''** என்பதை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டவர். கடவுளின் திட்டத்திற்கு முழுமையாக அடிப்பணிவதற்கு எவ்விதம் முன்வந்தார்?. தடையாக எழுந்த தடைகளை எவ்விதம் தடுத்தார்? **''சாத்தானே அப்பாலே போ''** சாத்தானின் சூழ்ச்சி முடிந்தது. வெற்றி வீரனாக பயணத்தை மேற்கொண்டார். நாம் ஆண்டவரோடு பயணத்தை ஆரம்பிப்போம். இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்படுகின்ற தடைகளை இனங்கண்டு கொள்வோம். சாத்தானை விரட்டுவோம். இறை விருப்பத்திற்கு அடிபணிவோம். எனது மணித்தியால செபத்தின் வழியாக இறைதந்தையின் குரலொலியைக்கேட்டு எம் புகழ்ச்சிக் கிராமத்தை கட்டி எழுப்புவோம்.

செபம்

அப்பா தந்தையே! உன்னதமான நான்குவகை அன்பினையும் உணவாக்கிக் கொண்டு எம் சீடத்துவ சங்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு வரம்தாரும். என் தலைவரே! என் இதழ்களைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010
ஆவணி 06
வெள்ளி
*முதலாம் வெளிப்பாடு*
தானி 7: 9-10,13-14
*பதிலுரைப் பாடல்*
திருப்பாடல்
97 1-2,5- 6, 9
இரண்டாம் வாசகம்
2 பேதுரு 1 : 16 -19
*நற்செய்தி வாசகம்*
புனித லூக்கா
9: 28- 36
ஆண்டவரின்
உருமாற்றத்
திருவிழா

பரி. நற் செய்தி

**இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக் கொண்டு ஒரு மலை மீது ஏறினார்கள். அவர் வேண்டிக் கொண்டிருக்கும் போது அவரது முகத் தோற்றம் மாறியது. அவரது ஆடையும் வெண்மையாய் மின்னியது. மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக்கொண்டிருந்தனர். ......... பேதுருவும் அவரோடு இருந்தவரும் .......... மாட்சியோடு விளங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். ...........பேதுரு இயேசுவை நோக்கி ஆண்டவரே நாம் இங்கே இருப்பது நல்லது. ........தாம் சொல்வது இன்னதென்று தெரியாமலே சொன்னார். ........ ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. .........அந்த மேகத்தினின்று இவரே என் மைந்தர் நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்கு செவி சாயுங்கள் என்று ஒரு குரல் ஒலித்தது......**

### ஒளியின் விழிப்புறுதல்

எனது ஆன்மாவின் உற்ற நண்பராவார் தூய ஆவியானவரே இயேசுவின் உள்ளரங்க அனுபவத்தின் நாமும் அனுபவித்திட எம்மை ஒளிமயமாக்கி வழிகாட்டியருளும். தூய ஆவியானவரின் வழி நடத்தலுக்கு கணத்திற்கு கணம் விழிப்புறும் இயேசு இறை அப்பாவிடம் வேண்டுவதற்காக மலை ஏறுவதும் அப்பாவின் அரவணைப்பிற்குள்ளாவதும் தமது உணவாகக் கொண்டிருந்தார். தமது நெருங்கிய சீடர்களான பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரையும் அழைத்துக்கொண்டு மலை ஏறுவது ஒரு விஷேட நிகழ்ச்சியாகும். மலை ஏறிய அவர் சீடர்களையும் அதே அரவணைப்புக்குள்ளாகி அப்பாவின் குரலுக்குச் செவிமடுத்த சீடர்களையும் அதே அனுபவத்திற்க்குள்ளாகுவதற்குத் தாகம் கொண்டார். அப்பா தந்தையின் வல்லமையின் மாட்சிமையும் அவர் மூலம் எடுத்துக் காட்ட வந்தார். அவரின் முகத்தோற்றம் மாறியது. ஆடையும் வெண்மையாய் மின்னியது. மாட்சிமையோடு பிராகாசித்த அவருடன் மோசே, எலியா பேசிக் கொண்டிருந்ததை சீடர்கள் கண்டு பிரமித்து போய் நின்றார்கள். உலக ஆசைகளுக்கு அடிமைப்பட்டு அந்த நிகழ்ச்சியை தனிமையாக அனுபவிக்க விரும்பும் போதுதான் கூறுவது என்னவென்று தெரியாமல் இயேசுவைப் பார்த்து நாம் கூடாரம் அமைத்து இங்கேயே தங்குவோம். என எடுத்துக் காட்டுகின்றனர். அக்கணமே இவரே என் மைந்தர் நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்கு செவி சாயுங்கள் என ஆண்டவரின் சொல் வானத்தில் இருந்து ஒலித்தது.

### எமது பேரில்

இறை அரசின் மக்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டோர். எமது அழைப்பிற்கு விழிப்புறுவோம். ஆண்டவரின் விருப்பத்தை நிறைவேற்றும் மக்களாக வாழ்கின்றோம். நாமும் உலக ஆசைகளுக்கு அடிமைப்பட்டு நான் எனக்கு என்னுடைய என்பவற்றிக்கு உள்ளாகி எமக்கென்று ஒரு கூடாரம் கட்டிக்கொண்டு வாழ முற்படுகின்றேன். எமது பலவீனங்களுக்கு விழிப்புறுவோம். கணத்திற்கு கணம் தூய ஆவியானவருக்கு விழிப்புறுவோம். தினம் எனது மணித்தியாலத்திற்குள்ளாகி அப்பாவின் அன்பினை அப்பாவின் குரலுக்கு செவிமடுப்பதை ஏற்படுத்திக் கொள்வோம் அப்பா எங்களது விருப்பத்தை நிறைவேற்றும் மகனாக மகளாக வாழ எம்மை வழி நடத்த தூய ஆவியானவரிடம் மன்றாடுவோம்.

### செபத்திற்குள்ளாதல்

அன்பின் ஆண்டவரே உமது திருக்குமரன் வழியாக உமது அரவணைப்புக்குள்ளாகி, உமது குரலுக்குச் செவிமடுத்து உமது திரு விருப்பத்தினை நிறைவேற்றும் மகனாக மகளாக வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை வழிநடத்தும்.

ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி
07 சனி

முதலாம் வெளியாடு
ஆபகூக் 1:12,2:4

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
9:7-12

நற்செய்தி வாசகம்
புனித மத்தேயு
17:14-20

புனித கயத்தன்
நினைவு

**நற்செய்தி நிகழ்ச்சி**

**அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும், மக்கள் கூட்டத்தினரிடம் வந்தபோது ஒருவர் இயேசுவை அணுகி அவர் முன் முழந்தாள் படியிட்டு, "ஐயா என் மகனுக்கு இரங்கும். அவன் வலிப்பு நோயால் பெரிதும் துன்புறுகின்றான். அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழுகின்றான். உன் சீடர்களிடம் அவனை கொண்டு வந்தேன், அவனை குணமாக்க அவர்களால் முடியவில்லை" என்றார். அதற்கு இயேசு "நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே, எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களை பொறுத்துக்கொள்ள இயலும்? அவனை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள் என்று கூறினார். கொண்டு வந்ததும் இயேசு அப்போதே கடிந்து கொள்ள அது அவனை விட்டு வெளியேறியது. அந்நேரமே சிறுவன் குணமடைந்தான். பின்பு சீடர்கள் தனிமையாக இயேசுவை அணுகிவந்து, "அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை? என்று கேட்டார்கள். இயேசு அவர்களை பார்த்து உங்கள் நம்பிக்கை குறைவுதான் காரணம். உங்களுக்கு கடுகளவு நம்பிக்கை இருந்தால், நீங்கள் இம்மலையை பார்த்து, இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றுமிராது என நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்றார்".**

**ஒளியின் விழிப்புறுதல்**

என் ஆருயிர் நண்பரான தூய ஆவியானவரே! இந்நற்செய்தி நிகழ்ச்சியுள் இயேசு ஆண்டவரின் உள்ளார்ந்தத்தைக் காண என்னை ஒளிமயமாக்கியருளும், இயேசுவிலும் நம்பிக்கைக் கொண்ட ஒருவன் இயேசுவின் சீடர் இடத்திலும் நம்பிக்கைக் கொண்டு மக்களை குணமாகும்படி கேட்கிறான். ஆனால் அவர்களால் குணப்படுத்த முடியவில்லை. சீடர்களால் செய்ய முடியாததை இயேசு கட்டாயமாக செய்வார் என்ற நம்பிக்கை, விசுவாசம் அந்த மனிதனிடம் இருந்ததை இயேசு காண்கிறார். சீடர்கள் மட்டில் மனம் வருந்தி, வேதனையுடனும், சினத்துடனும் நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே! எவ்வளவு காலம் நான் உங்களுடன் இருக்க முடியும்? என்று கேட்டார். இவ்வளவு காலமும் ஒன்றாக இருந்து சொன்னவற்றையும், செய்தவற்றையும் கண்டறிந்தும், கேட்டிருந்தும் நம்பிக்கை விசுவாசக் குறைவான சீடர்கள் மட்டில் வேதனைப்படுகிறார், கடுகளவு விசுவாசம் நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையை பார்த்து "இங்கிருந்து அங்கு போ" எனக் கூறினால் அது பெயர்ந்து போகும் உங்களால் முடியாதது ஒன்றும் இராது எனக்கூறி சீடர்களுக்கு ஆழமான விசுவாசத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கிறார்.

**எம் பேரில்**

இன்று நாம் எம்மைச்சுற்றி திரும்பிப் பார்ப்போம். அன்று இயேசுவுடன் வாழ்ந்த சீடர்கள் இயேசுவின் செயல்களில் வல்லமை, தந்தையில் தங்கி வாழ்ந்த விசுவாசம், நம்பிக்கை அனைத்தையும் கண்டும், கேட்டும் விசுவாசக்குறைவால் அவர்களால் அந்த மகனைக் குணப்படுத்த முடியவில்லை. எமது விசுவாசம் நம்பிக்கை உயிர்த்த ஆண்டவரின் சாட்சியாளர்களாகி இருந்தாலும், இயேசுவின் வல்லமையுடன், விசுவாசத்துடனும் நோயாளர்களுக்கு செபித்து குணம் பெற, விடுதலைப்பெற நாம் தாகத்தோடு செயற்படுகின்றோமா? எமது விசுவாசம் நம்பிக்கையை அதிகரிக்குமாறு ஆவியானவரின் வல்லமையை வேண்டிச் செபிப்போம்.

**செபத்திற்கு உள்ளாகுதல்**

அப்பா, தந்தையே! உமது திருமகனைப்போல உம்மிலே உறுதியான விசுவாசம் நம்பிக்கைக் கொண்டவர்களாக வாழ எம்மை வல்லமைப் படுத்தியருளும். ஆமென். கர்த்தராலே உம்மை தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். (தி.பா. 9-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 08
ஞாயிறு
முதலாம் வாசகம்
சா.ஞா. 18:6-9
பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
33:1,12,18-20,22
இரண்டாம் வெளிபாடு
எபி 11:1-2,8-19
(or) 11:1-2,8-12
புனித லூசியாஸ்
12:32-48
(or) 12:35-40

பொ.கா. 19ம்
ஞாயிறு

நீதிமான்களுக்கும் மகா உன்னதரான இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட தெய்வீகமானதொரு உடன்படிக்கை பற்றி முதலாவது வெளிப்பாடு வெளிப்பாடாகின்றது. "நல்லவர்களின் தூய மக்கள்.... நன்மைகளையும், இடர்களையும் என்றும் போல பகிர்ந்துக் கொள்வார்கள். என்றும் இறை சட்டத்திற்கு அவர்கள் ஒருமித்து உடன்பட்டார்கள்". தாங்கள் நீதிவான்கள் என்றபடியால் ஆசீர்வாதங்களை மாத்திரம் வேண்டுவதற்கு ஒருவராலும் முடியாது. இன்றைய பரிசுத்த நற்சிந்தனை வெளிப்பாடு வழியாக ஆண்டவர் எமக்கு சவால் ஒன்றை முன் வைக்கின்றார். "மிகுதியாகவே கொடுக்கப் பட்டவரிடம், மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும்". ஆபிரகாம் உட்பட நீதிமான்களின் விசுவாச வாழ்க்கை பற்றிய சவாலும் 2வது வெளிப்பாடு வழியாக எம்முன் வைக்கப்படுகின்றது.

முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

தாங்கள் நம்பியிருந்த வாக்குறுதிகளை தெளிவாகத் அறிந்து அவற்றில் மகிழ்ந்திருக்கும்படி அந்த இரவு எங்கள் முதாதேயருக்கு முன்னறிவிக்கப்பட்டது. நீதிமான்களின் மீட்பையும் அவர்களுடைய பகைவர்களின் அழிவையும் உம் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் பகைவர்களை நீர் தண்டித்த அந்த ஒரே செயலால் உன்னிடம் எங்களை அழைத்து பெருமைப் படுத்தினீர். நல்லவர்களின் தூய மக்கள் மறைவாக பலி செலுத்தினார்கள்.....

பரி நற்செய்தி வெளிப்பாட்டிலிருந்து

"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம். உங்கள் தந்தை உங்களை தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார்.... திருமண விருந்துக்கு போயிருந்த தம் தலைவர் திரும்பி வந்து தட்டும்போது உடனே அவருக்கு கதவை திறக்க காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள். தலைவர் வந்து பார்க்கும்போது, விழித்திருக்கும் பணியாளர்கள் பேறு பெற்றவர்கள்...... தன் தலைவரின் விருப்பத்தை அறிந்திருந்தும், ஆயத்தமின்றியும் அவர் விருப்பப்படி செயல் படாமலும் இருக்கும் பணியாளன் நன்றாய் அடிபடுவான். ஆனால், அவர் விருப்பத்தை அறியாமல் அடிவாங்க வேண்டிய முறையில் செயற்படுபவன் அவரது விருப்பத்தை அறியாமல் செயற்படுவதால் சிறிதே அடிபடுவான். மிகுதியாக கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர் பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்பட்டவரிடம் இன்னும் மிகுதியாக கேட்கப்படும்.

இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் எனும் உறுதி. கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. இந்த நம்பிக்கையால்தான் நம் முதாதேயர் நற்சான்று வென்றனர். ஆபிரகாம் தாம் அழைக்கப்பட்ட போது கீழ்படிந்து. உரிமைப் பேறாக பெறவிருந்த இடத்திற்குச் சென்றதும் நம்பிக்கையினால் தான். நாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார்.... ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கை பலியிடத் துணிந்தது நம்பிக்கையினால் தான்......... இறந்தோரை கடவுள் உயிரோடு எழுப்ப வல்லவர் என்பதை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்கின்றார். எனவே, அவர் தம் மகனை மீண்டும் பெற்றுக் கொண்டார். பின்பு நடக்கவிருந்ததற்கு இது ஓர் அறிகுறி.**

**ஒளியின் விழிப்புறுதல்**

இறை வார்த்தையை ஆழமாக அனுபவிப்பதற்கான தாக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதோடு அதற்கான வல்லமையையும், அருளையும் தூய ஆவியானவரிடம் வேண்டுவோம். அதன் பின்னர் இந்த வரத்திற்கான மூன்று வெளிப்பாடுகளை மிகவும் தேவையோடு பரிசுத்த வேதாகமத்தில் இருந்து தியான நிலையில் வாசிப்போம். ஒரே வெளிப்பாட்டினை தேவையாயின் பல தடவைகளும் வாசிப்பதானது பிரயோசனத்திற்கேதுவாகும் இவ்வாறு வாசிக்கையில் நமக்குத் தாக்கத்தை ஏற்படுத்திய வார்த்தை வசனத்தோடு தூய ஆவியானவர் முன்னிலையில் சிறிது நேரம் தோன்றி நிற்போம்.

இறைவன் பேரில் நம்பிக்கைக் கொண்டவர்களாக அவரோடு நெருங்கி உறவாடுபவர்கள் எதுவிதமான இடர்களுமின்றி சௌபாக்கியத்தோடு வாழ்பவர்கள் என்பது அனைவரினதும் பொதுவான நம்பிக்கையும், எதிர்பார்ப்புமாகும். மறுமலர்ச்சி அடைந்த மக்கள் என்ற வகையில் எமக்கு இடர்கள் ஏற்படும்போது, மற்றவர்கள் எம்மிடம் வினவும் வினாக்களில் இருந்து மென்மேலும் உறுதியாகின்றது. இறைவனது விருப்பப்படி வாழ்வோர் **நன்மைகளையும், இடர்களையும் ஒன்றுபோல பகிர்ந்து கொள்வார்கள்.** என்று முதலாவது வெளிபாடு கூறுகின்றது. எம்மை போலவே சாதாரண மனிதனாக வாழ்ந்த இறைமகன் பேரில் கண்களை ஏறெடுப்போம். அவருக்கென்று ஒன்றுமே இருக்கவில்லை. தலைவைப்பதற்கு கூட இடமிருக்கவில்லை. மதம், அரசியல் தலைவர்களால் ஏற்பட்ட நிந்தை அவமானங்களோ பல. இறுதியில் சிலுவை மரணமே அவருக்கு உறுதியாயிற்று. கிறிஸ்தவர்களான எமது வாழ்க்கை எத்தகையனதாக அமைய வேண்டும் என்பதன் ஒரே அளவுகோள் அவராவார். இறைவன் நிமித்தம், நிந்தை, பீடணைகள், அவமானம் என்பவற்றிற்கு முகம் கொடுப்பதற்கு நேரிடுவதானது கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிடைக்கப்பெறுகின்ற மாபெரும் வரப்பிரசாதமாகும். அது எமது வாழ்வின் ஒரு பகுதியாகும். மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு தொடர வேண்டிய பயணமாகும். ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையாவார். விசுவாச வாழ்வு வாழ்ந்த நீதியானவர். **''ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாக கருதினார்''**. (தொ.நூ 15:6) ஆனபடியால், மனிதரென்ற விதத்தில், எதுவிதமான எதிர்பார்ப்பையுமே வைத்துக் கொள்வதற்கு முடியாத நிலையில் கூட இறைவனால் அனைத்தையுமே செய்ய முடியுமென்று நம்புவதே விசுவாசமாகும். எமது முயற்சியால் மாத்திரம் செய்ய முடியாததை இறைவன் இக்கனத்திலேயே செய்து முடித்து விட்டார் என்று நம்புவதல்லவா ஆழமான விசுவாசம். நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாகும். சிறுமந்தையென ஆண்டவர் யாரை இனங்காண்கின்றார்? கோடிக் கணக்கான மக்கள் கிறிஸ்தவர்களான போதிலும் அவரை அண்மித்தவாறு அர்ப்பணமான வாழ்க்கை நடத்தியவாறு சமுதாயமானது நடை பயில்கின்ற பாவகரமான வாழ்க்கை முறைக்கு எதிராக சவால் மிக்க வாழ்வு வாழுகின்ற சிறிய பிரிவினரைப் பார்த்தா அவர் அவ்வாறு கூறுகின்றார்? விழிப்புடன் இருங்கள் என்று அவர் எச்சரிக்கை விடுக்கின்றார். எசமானின் வருகையைக் குறித்தா விழிப்புடன் இருக்குமாறு கூறுகின்றார்???

**செபம்**

இயேசு ஆண்டவரே! நீர் இவ்வுலகில் வாழ்கிற காலத்தில் முழுமையாக தந்தையின் திருவிருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றி வாழ்ந்தது போல, நாம் தந்தையின் விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றுவதற்கான வல்லமையை தந்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 9
திங்கள்

*முதலாம் வெளிப்பாடு*
எசேக்கியேல்
12 : 5.24-28

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
148:1-2, 11-14

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
17:22-27
திருச்சிலுவை
புனித திரேசா
பெனடிக்டா நினைவு

பரிசுத்த நற்செய்தி

கலிலேயாவில் சீடர்கள் ஒன்று திரண்டு இருக்கும் போது, இயேசு அவர்களிடம் மானிட மகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கின்றார் அவர்கள் அவரை கொலை செய்வார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பபடுவார் என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் துயரமடைந்தார்கள்.

அவர்கள் கப்பர் நாகூமுக்கு வந்தபோது கோவில் வழியாக இரண்டு திரக்மா தண்டுவோர், போதுறுவிடம் வந்து உங்கள் போதகர் இரண்டு திரக்மா வரியை செலுத்துவதில்லையா? என்று கேட்டனர். ...... "**எனவே நீ போய் கடலில் தூண்டில் போடு. முதலில் அகப்படும் மீனை எடுத்து அதன் வாயைத் திறந்து பார்த்தால் ஸ்தாத்தேர் நாணயத்தைக் காண்பாய். அதை எடுத்து உன் சார்பாகவும் என் சார்பாகவும் அவர்களிடம் செலுத்து**" என்றார்.

ஒளியில் விழிப்புறுதல்.

ஆவியானவரே! உள்ளங்களை ஊடுருவி அறிபவரே! கிறிஸ்து ஆண்டவரின் உள்ளத்தின் விருப்பை அறிய என்னை வழிநடத்தியருளும்.

இயேசு ஆண்டவர் தாம் உலகில் இருந்தாலும் உலகிற்குரியவரல்லர் என்பதை முழுமையாக அறிந்திருந்தார். உலகோரால் தமக்கு ஏற்படவுள்ள பாடுகள் மரணம் பற்றி அறிவித்தவர் மூன்றாம் நாளில் தாம் பெறவிருக்கும் உயிர்ப்பின் மகிமையையும் அறிவிக்கின்றார்.

இயேசு ஆண்டவர் அனைவர் உள்ளங்களையும் ஊடுருவி அறியும் தேவன் என்பதை பேதுரு அறிந்து கொள்கின்றார். இயேசு ஆண்டவர் இல்லாத இடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பேதுருவானவரால் கொடுக்கப்பட்ட விடைக்கும் இல்லம் வந்ததும் பதில் கொடுக்கும் ஆண்டவர் முன் பேதுருவானவர் வியப்புற்று நின்றிருக்கலாம் அல்லவா? அவரது சொல்லில் துலங்கிய வல்லமையை கூறியவை கூறியவாறே நடந்தவை அனைத்தும் ஆண்டவர் மீது ஆழமான விசுவாசம் கொண்ட வாழ்க்கை வாழ பேதுருவானவரை வழிநடத்தியது.

எம் பேரில்

எம் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் வல்லமையோடு செயல் புரிகின்ற ஆவியானவர், நன்மை தீமையை பகுத்தறியும் வரத்தினை எமக்கருள்கின்றார். அன்று வரி செலுத்துவோரின் உள்ளத்தை ஊடுருவி அறிந்த இறை மகனானவர் இன்று என்னையும் அறிந்துள்ளார் அல்லவா? நான் வாழ்வினில் கொடுக்கும் பதில் எவ்வாறு அமைந்துள்ளது? அனைத்தும் தந்தைக்கு உரிமையாதலால், தந்தையின் திரு விருப்பத்திற்கு அடிபணிவதற்கு நான் ஆயத்தமாகி இருக்கின்றேனா? ஒவ்வொரு கணமும் தந்தையே, "**உமது விருப்பத்தைத் தவிர வேறு எதுவும் எனக்கு இல்லை**" எனும் பொதுத் தலைப்பு என் வாழ்வாகியுள்ளதா? உலகம் உன்னை அறியாவிடினும், நான் உன்னை அறிந்திருக்கின்றேன் எனும் தந்தையின் ஒலி கேட்கின்றதா? ஆண்டவரிடம் சரணடைவோம்.

செபம்

ஆண்டவரே! உன் சார்பாகவும், என் சார்பாகவும் அவர்களிடம் இதை செலுத்து எனக்கூறியவரே! தன்னலம் துறந்து பிறர் நலம் கொண்டவனாக வாழ வரமருளும். பிறர் சார்பாக அவர்களது நல் வாழ்விற்காக உம் திருமுன்னிலையில் தோன்றி நிற்கும் வரத்தினை எனக்களித்தருளும். உமது பரிசுத்தமே உருவான திருநாமம் என்றென்றும் பரிசுத்தப்படுவதாக! ஆமென்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 10
செவ்வாய்

*முதலாம் வாசகம்*
2 கொரி 9:6-10

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
112:1-2, 5-9

*நற்செய்தி வாசகம்*
யோவான்
12:24-26

புனித
லோரன்ஸ் விழா

பரி. நற்செய்தியினிருந்து

''கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகின்றேன். தமக்கு என்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வை பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். எனக்கு தொண்டு செய்வோர் என்னை பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பார். எனக்குத் தொண்டு செய்வோர்க்கு தந்தை மதிப்பளிக்கிறார் என்றார்.

**ஒளியின் விழிப்புறுதல்**

ஞானம், வீரம், சக்தி, அறிவைப் பொழியும் தூயனே வந்தருளும். இறை வாக்கை எமக்கு வெளிப்படுத்தியருளும். இயேசு தாம் இவ்வுலக வாழ்வில் முகம் கொடுக்க இருக்கும் சகல வேதனை சோதனைகளை அறிந்திருந்தார். மற்றவரின் மகிமைகளையும் நல் வாழ்த்துக்களையும் அவர் எதிர்பார்க்கவில்லை. ஆகவேதான் தம் சீடரையும் தொண்டுக்காக ஆயத்தம் செய்யும் இயேசு, நான் இருக்கும் இடத்தில் தம் தொண்டரும் இருப்பர் என கூறுகின்றார். இன்றைய நாள் நற்சிந்தனையின் ஊடாக கோதுமை மணியை முன்வைத்து பல மணிகளை உருவாக்க ஒரு மணி தன்னையே தியாயம் செய்ய வேண்டும் என்று பலியாகும் அன்பை எடுத்துரைக்கின்றார். இயேசு கடினமான காரியங்களையும் மிகவும் இலகுவான வார்த்தைகளால் கூறியது மாத்திரமல்ல அதனை செயலிலும் செயற்படுத்துகின்றார். இறைவன் தம் மக்களை அன்பு செய்வது போல, ஒருவர் மற்றவரை அன்பு செய்ய வேண்டும் என்பது அவர் திருவிருப்பமாகும்.

தனது மரணத்தின் மூலமாக மட்டுமே உலகை மீட்க முடியுமென்பதையும் இதுவே இறை தந்தையின் திருவுள்ளம் என்பதையும் அவருள் இருக்கும் தூய ஆவி விழிப்பூட்டுகின்றார். இன்றைய முதலாம் வெளிப்பாட்டிலே மனவருத்தத்தோடோ அல்லது மற்றவரின் கட்டாயத்தாலோ எதனையும் மற்றவருக்கு கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர். கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர் என்பதை தூய பவுல் கொரிந்திய சங்கத்திற்கு அறிவிக்கிறார்.

**எம் பேரில்**

தம்மை குறித்து வெளிப்படையாக பேச விரும்பாத இயேசு மறைமுகமாக இறை திட்டத்தை வெளிப்படுத்துகின்றார். தன்னலமற்ற இறைவனின் சேவை துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கும் என்பதை நன்கு அறிந்தாலும் விருப்பத்துடன் இடமளிக்கின்றார். கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழும் நாம் உலகம் எமக்குத் தரும் சவால்களில் வெற்றியைக் காண எம்மை பலியாக்க முடியுமாக இருக்கின்றதா? பணம், செல்வாக்கு, பதவி எனும் உள ஆசைகளின் முன்னால் மற்றவர் நலன் கருதி மற்றவர்களுக்காக பலியாக மனம் இடம் அளிக்கின்றதா? இயேசுவின் ஆழமான விசுவாசத்துடன் அவரையும் பின் தொடர்ந்தால் உலகமே குப்பை என்பதை காண்போம். நிலை வாழ்வைப் பெற இயேசு ஒருவரே வழி என்பதை உணர்வோம். இயேசு என் வாழ்வின் மீட்பரா சிந்திப்போம். தவறி இருந்தால் மன்னிப்பை பெறுவோம்.

**விழிப்புறுவோம்**

மனம் இறங்கி கடன் கொடுக்கும் மனிதர் நன்மை அடைவர். அவர்கள் தம் அலுவல்களில் நீதியுடன் செயற்படுவர். எந்நாளும் அவர்கள் அசைவுறார். நேர்மை உள்ள மக்கள் மனதில் என்றும் வாழ்வார் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 11
புதன்

*முதலாம் வெளிப்பாடு*
எசே 9: 1-7
10:18-22

*பதிலுரை பாடல்*
திருப்பாடல்
தி:பா 113:1-6

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
மத்:18:15-20

கன்னியரான புதிய கிளாரா நினைவு

பரி. நற் செய்தி நிகழ்ச்சி

**உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராக பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும் போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்டுங்கள். அவர் உங்களுக்கு செவி சாய்த்தால் நல்லது உங்கள் உறவு தொடரும் இல்லை என்றால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் உடைய வாக்கு மூலத்தால் அனைத்துக்கும் உறுதி செய்யப்படும். என்னும் மறை நூல் மொழிக்கு ஏற்ப உங்களோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக்கொண்டு போங்கள் அவர்களுக்கும் செவி சாய்க்காவிடில் திருச்சபையிடம் கூறுங்கள் திருச்சபைக்கும் செவி சாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரி தண்டுபவர் போலவும் இருக்கட்டும்........ உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருளுவார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கின்றேன். என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்.**

ஒளியின் விழிப்பு

இன்றைய நற்செய்தி வாசகமானது தவறு செய்யும் ஒருவரை மனமாற்றத்திற்கு உட்படுத்தலாம். என்பதை தெளிவுபடுத்துகின்றது. பாவம் செய்யும் ஒருவரை இயேசு வெறுத்து ஒதுக்கவில்லை மாறாக பாவத்தை இயேசு வெறுத்து ஒதுக்கினார். தவறு செய்தவரை இறைவனின் மகன் மகள் என்னும் மனநிலையை முன் வைத்து தனித்திருக்கும் பொழுது அணுகி அவர் தவறுகளை எடுத்துக் காட்டி சாட்சிகள் இருந்தால் அவ் உதவியுடன் அவரைத் திருத்த முயல வேண்டும். அப்படியும் செவிமடுக்காத சந்தர்ப்பத்தில் திருச்சபையின் உதவியை நாடி அவர் மனதை புண்படுத்தாதவாறு மனமாற்றத்திற்கு அவரை அழைக்க வேண்டும். பயன் கிட்டாத சந்தர்ப்பத்தில் அவரை தனிமையில் விட்டு மனம் திரும்பி வரும்வரை எவ்வேளையும் ஏற்றுக்கொள்ளத் தாகமாய் இருக்கின்றோம் என்ற நற் செய்தியை அறிவித்து இடமளிக்க நற் செய்தியானது தெளிவுப் படுத்துகின்றது.

எம் பேரில்

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் தூய ஆவியானவர் விண்ணரசின் மக்களாகும் வரத்தை பெற்றுத் தருகின்றார். இறை அன்பால் நாம் நிறைவு பெறுகின்றோம் அன்பு என்னும் அருட் கொடையால் நாம் தூய்மையாகின்றோம். ஆயினும் மனித பெலவீனத்தால் எம்மை அறியாது நாம் தவறு செய்யும் சந்தர்ப்பங்கள் அதிகம் **"தூய உள்ளத்தோர் பேறு பெற்றவர் ஏனெனில் அவர்கள் கடவுளை காண்பார்"** (மத் 5 : 8) இறைவன் அன்பில் வாழ நாம் தவறுகளை ஏற்று அதற்காக அவரிடம் மன்னிப்பு பெற வேண்டும் அல்லவா? இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் எமக்குப் புது வாழ்வை அளித்துள்ளது. எமது கல்லான கடினமான மனதை மாற்றி இயேசுவைப் பின் தொடர தடைகளை இனங்கண்டு இறைமகனாக, மகளாக வாழும் வரம் வேண்டுவோம். ஒற்றுமையினூடாக ஒருமனப்பட்டு இயேசு ஆண்டவரைப் சந்திப்போம்

செபத்திற்குள்ளாகுதல்

கடவுளே என் மீது இரங்கும் .எனக்கு ஆசி வழங்கும் உமது திருமுக ஒளியை என் மீது வீசுவீராக நேர்மையானவரே மகிழ்ச்சியடைவர். கடவுள் முன்னிலையில் ஆர்ப்பரிப்பர் மகிழ்ந்து கொண்டாடுவர் ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 12
வியாழன்

*முதலாம் வெளிப்பாடு*
எசேக்கியேல்
12:1-12

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
78:56-59
61-62

சாந்தாஸ் நகர்
புனித ஜோன்
பிரான்ஸிஸ்கோ

பரிசுத்த நற்செய்தி வெளிப்பாடு

**பின்பு பேதுரு இயேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதர சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராக பாவம் செய்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா?" என்றுக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் கூறியது "ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழு முறை என நான் உனக்குச் சொல்கிறேன். விண்ணரசை பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம், ஓர் அரசர் தம் பணியாளரிடம் கணக்கு கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன் பட்ட ஒருவரைக் கொண்டு வந்தனர்...... அப்பணியாளின் தலைவர் பரிவுக் கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். ஆனால் அப்பணியாளன் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன் பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு...... கழுத்தை நெரித்தான்....... அப்பொழுது தலைவர் அவனை வரவழைத்து "பொல்லாதவனே நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுப் போல் நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டுமல்லவா?....... "உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர ச்கோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்."............** (முழுமையாக தியானிக்கவும்)

**ஒளியில் விழிப்புறுதல்**

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே! இப்போ வாரும். இறங்கி வாரும் எங்கள் மத்தியிலே......

அன்பானவரே! மன்னிக்கும் மனப்பான்மை பற்றிய பாடத்தை எமக்கு வெளிப் படுத்துகின்றார். மீண்டும் மீண்டும் இப்பாடத்தை கற்றுக் கொள்வோம். "மன்னிக்கத் தெரிந்தவன் மாணிக்க கோவில்" இது ஓர் பழமொழி.

நற்செய்தியில் பத்தாயிரம் தலாந்து கடன் பட்டவன் அரசனால் மன்னிக்கப் படுகின்றான். மன்னிப்பை பெற்று விடுதலையோடு வெளியேறியவன், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டவனை துன்புறுத்தி கடனை அடைக்குமாறு கேட்கிறேன். சுயநலம் மேலோங்கி மற்றவரை மிதிக்க முற்படுகின்றான்.

மனித உருவில் தோன்றிய மகனானவர் "உன் பாவம் மன்னிக்கப்பட்டது. இனிமேல் பாவம் செய்யாதே" என்று மக்களை விடுதலையாக்கு கின்றார். அது மாத்திரமல்லாமல் தம்மை துன்புறுத்தியவர்கள் தெரியாமலே இதை செய்கின்றார்கள். இவர்களை மன்னியுமென்று தந்தையிடம் வேண்டுகின்றார். மன்னிப்பவர் தாராள மனதோடு மற்றவரை மன்னிக்கவேண்டும் என்பதை பரலோக மந்திர செபம் வழியாக "பிறர் குற்றங்களை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் பாவங்களை மன்னியும்". நீங்கள் மனமாறி மன்னிக்காவிடில், விண்ணகத்தந்தை உங்களை மன்னிக்க மாட்டார். ஆகவே ஒளியானவர் இன்றைய நற்செய்தி வாயிலாக கற்றுத்தரும் பாடத்திற்கு விழிப்புற்று இறைவிருப்பத்தை நிறைவேற்ற முன்வருவோம்.

**செபம்**

அப்பா தந்தாய்! என்னை முழுமையாக அறிந்திருப்பவரே! எனது மனதிற்கு தாக்கத்தை அளித்த ஒரு சில நிகழ்வுகளால் மற்றவர்க்கு மன்னிப்பை அளித்திட முடியாது பரிதவிக்கின்றேன். எனது எத்தனையோ தவறுகளை நீர் மன்னித்தீர். ஆண்டவரே மற்றவரது சிறு தவறை மன்னித்திட நல்ல மனதை எனக்கு தந்தருளும். நான் உம்முடைய மகளாக / மகனாக சாட்சியம் பகர என்னை வழி நடத்தியருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 13
வெள்ளி

*முதலாம் வெளிபாடு*
எசேக்கியேல்
16 : 1-15, 60,63

*பதிலுரைப் பாடல்*
திருப்பாடல்
12:2-6

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
19:3-12

பரி. நற்செய்தி நிகழ்ச்சி

பரிசேயர் அவரை அணுகி அவரை சோதிக்கும் நோக்குடன் ஒருவர் தம் மனைவியை எக்காரணத்தை யாவது முன்னிட்டு விலக்கி விடுவது முறையா? என்று கேட்டனர். அவர் மறுமொழியாக படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார் என்று நீங்கள் மறைநூலில் வாசித்தில்லையா? என்று கேட்டார். மேலும் அவர் இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு தம் மனைவியுடன் ஒன்றித்து இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல் எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்றார். அவர்கள் அவரைப் பார்த்து அப்படியானால் மணவிலக்குச் சான்றிதலை கொடுத்து மனைவியை விலக்கிவிடலாம் என்று மேசே கட்டளையிட்டது ஏன் என்றார்கள்........

### ஒளியில் விழிப்புறுதல்

வாரும் படைப்பாளராம் தூய ஆவியானவரே உம் அன்பினால் ஆட்கொள்ளும். இன்றைய வார்த்தைக்கு நாம் செவிமடுக்கும் போது திருமணம் என்பது கடவுளால் இணைக்கப்பட்ட புனிதமான இணைப்பாகும் என்பது வெளியாகின்றது. அதனால்தான் "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்று முன்பே கடவுள் கூறியிருக்கின்றார். மனிதர் இந்த புனிதத்துவத்தை பாதுகாத்திட ஒவ்வொருவருக்கும் அருட்கொடைகளை அருளியிருக்கின்றார். அதைத் தகுந்த முறையில் அனுபவித்தால், வாழ்க்கையில்திருமண வாழ்வின் புனிதத்தைப் பாதுகாத்திட முடியும். நம்முள் வல்லமையுடன் செயற்படுபவரும் நாம் நினைப்பதற்கு மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருக்கு மகிமை அளிப்பவர்களாக இருப்போம். இறைவன் வாக்களித்ததை அருளாமல் விடார். இந்த ஆசி திருமணமாகாதவருக்கும் உரியது. அவர்கள் ஆண்டவருக்குரியவற்றில் அக்கறை உள்ளவர்களாகவும் அவருக்கு உகந்தவற்றை செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். கடவுள் அருளிய அருட்கொடையை அனுபவிப்பவரைத் தவிர வேறு எவரும் இக்கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

### எம்மில் விழிப்புறுதல்

இன்று திருமணம் என்பது ஒரு நிகழ்வு தான். சாகும்வரை இறைவன் முன்னிலையில் ஏற்ற வாக்குறுதியை இன்று எத்தனை பேர் நம்மில் காப்பாற்றுகிறோம். இன்று திருமணம், நாளை விவாகரத்து என்று வீட்டுக்கு வீடு மலிந்து கிடக்கின்றது. உண்மையில் நாம் இறைவனுக்கு பயந்து வாழ்வோமாகில் இப்படியான இழிவான செயல்களுக்கு இடங் கொடுக்காமல் இறைவன் முன் ஏற்றுக் கொண்ட திருமணம் என்னும் திருவருட்சாதனத்தை இறுதிவரை கடைப் பிடிப்போம்.

### செபம்

அன்பின் தந்தையே! கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்று உமது வார்த்தைக்கு விழிப்புற்று புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து வாழ வரம் தாரும் இறைவா!
ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 14
சனி

*முதலாம் வெளிப்பாடு*
1 குறிப்பேடு
15:3-4,15-16,16:1-2

*பதிலுரைப் பாடல்*
திருப்பாடல்
132:6-7,9-10,13-14

*இரண்டாம் வெளிப்பாடு*
I கொரி15:54-57

*நற்செய்தி வெளிப்பாடு*
லூக்
11:27-28

பரிசுத்த நற்செய்தியிலிருந்து

**அவர் இவற்றை சொல்லிக் கொண்டிருந்த போது கூட்டத்தில் இருந்த பெண்ணொருவர் ''உம்மை கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்'' என்று குரல் எழுப்பிக் கூறினார். அவரோ, ''இறைவார்த்தையைக் கேட்டு அதை கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றவர்'' என்றார்.**

ஒளியின் விழிப்புறுதல்

மறை இரகசியத்தை வெளிப்படுத்தும் ஆவியானவரே! கிறிஸ்துவின் உள்ளரங்கத்தை தியானிக்க நீரே என்னை மூடிக்கொள்ளும். **இறை வார்த்தையைக்கேட்டு அதைக்கடைபிடிப்போர் பேறுபெற்றவர்.** என கிறிஸ்து கூறியதிலிருந்து தாயை பேறுபெற்றவர் எனக்கூறுவதுடன், இறை வார்த்தையில் வாழ்ந்து பேறுபெற்றவர்களாக வாழ அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார். கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும் சட்டத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட வேளை, இறை வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை. இதனாலே தான் அவர் பரிசேயர், சதுசேயரை சாடுகின்றார். இன்று எம்மைப் பார்த்து இறைவார்த்தையில் வாழ அழைக்கின்றார். அவர் அழைப்புக்கு விழிப்புறுவோமா?.

எம் பேரில்

பேறுபெற்ற அன்னை விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளாக எம் தாய் திருச்சபை நினைவுகூறுகின்றது. பழைய ஏற்பாட்டில் இறை வார்த்தையை ஏந்திய பேழையை பற்றி முதலாம் எடுத்துரைப்பில் கூறப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் இறைவனை தாங்கிய மரியாள் மகிமையின் பேழையாக உவமிக்கப் படுகின்றாள். உலகத்தைப் படைத்தவர் பிதா. பாவத்தில் இருந்து மக்களை விடுதலை செய்தவர் மகனாகிய சுதனானவர். தூய்மை படுத்துபவரும் வழி நடத்துபவரும் தூய ஆவியானவர். இத்திரித்துவத்தின் இலட்சணங்கள் அன்னை மரியாளில் இருந்தது. கிறிஸ்துவைப் பெற்ற தாய் படைப்பாளியாகவும், கிறிஸ்து பாவத்தில் இருந்து எமக்கு விடுதலைப் பெற்றுத்தரும் இறை திட்டத்திற்கு உற்ற துணையாக இருந்தார்கள். **''என் மகன் சொல்வதைக் கேளுங்கள்''** என்று கானா ஊர் திருமண விருந்தின்போது சொன்னதுபோல இன்று மக்களை இறைவனிடம் வழிநடத்துகின்றார். இச்செயற்பாட்டுள்ள அன்னையை **பேறுபெற்ற அன்னை** என போற்றுவது தகுதியானதே. தாயின் மகிமையை அறியாத பல பரிவினை சபைகள் தாயை தேவ அன்னையாக மறுதலிக்கின்றது. தேவ மகனை சுமந்த தாய் மனுக்குல மீட்புக்கு வழிவகுத்த அன்னையை **மீட்பின்** தாயெனக் கூறுவது சாலப் பொருத்தமானதே! **தாயின் சிறந்ததோர் கோயிலும் இல்லை** என்ற வாக்கிற்கேற்ப அன்னை காட்டும் இறைவழிச் சென்று நாமும் பேறுபெற்ற வாழ்வைக்காண்போம்.

செபம்

அன்பைப் பொழியும் இறைவா! எமக்காக நீர் தந்த அன்னைக்கு நன்றி. உம் அன்னை வாழ்ந்து காட்டிய வழியில் நானும் வாழ வல்லமை உள்ள ஆவியை தந்து வழிநடத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 15
ஞாயிறு

*முதலாம் வெளிப்பாடு*
திரு வெளிப்பாடு
11:19,12:1-6,10
*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
45:9-11,15
*இரண்டாம் வெளிப்பாடு*
1 கொரி
15:20-26
*நற்செய்தி வெளிப்பாடு*
புனித லூக்கா
1:39-56
புனித கன்னி
மரியாயின்
விண்ணேற்பு
பெருவிழா

பொ.கா
20ம் ஞாயிறு

ஞாயிறு தினமானது இயேசு கிறிஸ்து நாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாள் ஆகும். ஆரம்ப காலத்தில் ஞாயிறு தினமானது ஆண்டவரது நாள் என இனங்காணப்பட்டது. ஆயினும் பார்த்த பார்வைக்கு இன்றைய நாளானது பேறுபெற்ற தாயரது விழா நாளாகும். உண்மையாகவே இன்றைய விழாவானது கிறிஸ்து நாதருடைய பாஸ்கா மறை இரகசியத்துடன் நேரடியாக தொடர்புடையதாகும். ஏனெனில், அவரது உத்தானத்தோடு எம் அனைவருக்கும் உரித்தான சதாகால வாழ்வுக்கான பங்கினை இன்று பேறுபெற்ற தாயார் பெற்றுக் கொள்கின்றார்.ஆனபடியால் சதாகால வாழ்வின் எதிர்பார்ப்போடு, பேறுபெற்ற தாயார் போல, இறைவிருப்பத்தினை நிறைவேற்றுகின்ற வாழ்வு வாழ்வதற்கான வல்லமையை இறைஞ்சிவோம்.

முதலாவது வெளிபாட்டிலிருந்து

........வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருத்தி காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களை தலைமீது சூடியிருந்தார். அவர் கருவுற்றிருந்தார். பேறுகால வேதனைப்பட்டு கடுந்துயருடன் கதறினார். வானில் வேறொரு அடையாளமும் தோன்றியது. இதோ நெருப்புமயமான பெரிய அரக்க பாம்பு ஒன்று காணப்பட்டது. அதற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன. அதன் தலையில் ஏழு மணிமுடிகள் இருந்தன. அது தன் வாலால் விண்மீன்களில் மூன்றில் ஒருபகுதியை நிலத்தின் மீது இழுத்துப்போட்டது.......... எல்லா நாடுகளையும் இரும்புக்கோல் கொண்டு நடத்த இருந்த ஓர் ஆண்குழந்தையை அவர் பெற்றெடுத்தார். அக்குழந்தையோ கடவுளிடம் அவரது அரியனை இருந்த இடத்திற்கு பறித்துச் செல்லப்பெற்றது. அப்பெண் பாலை நிலத்திற்கு ஓடிப்போனார். அங்கு 1260 நாள் அவரை பேணுமாறு கடவுள் அவருக்கென ஓர் இடத்தை ஏற்பாடு செய்திருந்தார்...

இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது...... ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போல கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்பொழுது உயிர் பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர் பெற்றார். அடுத்து, கிறிஸ்துவின் வருகையின் போது அவரை சார்ந்தோர் உயிர் பெறுவர். அதன் பின்னர் முடிவு வரும்......... சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும்.

பரிசுத்த நற்செய்தியிலிருந்து

........மரியாள் புறப்பட்டு யூதேயா மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்....... எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்தக் குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசிப்பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிப்பெற்றதே என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? ....... ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுப்பெற்றவர்" என்றார். அதை கேட்ட மரியாள் பின்வருமாறு கூறினார்.

"ஆண்டவரை எனது உள்ளம்
போற்றிப் பெருமைப்படுத்துகின்றது
என் மீட்பராம் கடவுளை நினைத்து
எனது மனம் பேருவகைக் கொள்கின்றது.
ஏனெனில் அவர் தம் அடிமையின்
தாழ் நிலையைக் கண்ணோக்கினார்.
இது முதல் எல்லாத் தலைமுறையினரும்
என்னைப் பேறு பெற்றவள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

ஏனெனில் வல்லவராம் கடவுள்
எனக்கு அரும் பெரும் செயல்களை
செய்துள்ளார்.
தூயவர் என்பதே அவரது பெயர்.
அவருக்கு அஞ்சி நடப்போருக்குத்
தலைமுறை தலைமுறையாய்
அவர் இரக்கம் காட்டி வருகின்றார்.
அவர் தம் தோள் வலிமையைக்
காட்டியுள்ளார்
உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச்
சிதறடித்து வருகிறார்.
வலியோரை அரியணையினின்று
தூக்கி எறிந்துள்ளார்.
தாழ் நிலையிலிருப்போரை
உயர்த்துகிறார்.
பசித்தோரை நலன்களால்
நிரப்பியுள்ளார்.
செல்வரை வெறுங்கையராய் அனுப்புகிறார்.
முதாதையருக்கு உரைத்தப்படியே
அவர் ஆபிரகாமையும் அவர் தம்
வழிமரபினரையும் என்றென்றும்
இரக்கத்தோடு நினைவில்
கொண்டுள்ளார்.
தம் ஊழியராகிய இஸ்ராயேலருக்கு
துணையாக இருந்து வருகின்றார்"

### ஒளியின் விழிப்புறுதல்

முதலாவது வெளிப்பாட்டில் அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ள பெண் இறை மக்களாவர். தலைமீது சூடப்பட்டிருந்த பன்னிரு விண்மீன்களும் இஸ்ரேயல் கோத்திரங்கள் பன்னிரண்டையும் குறிக்கின்றன. மெசியா அல்லது கிறிஸ்து நாதர் இறைமக்கள் என்னும் பெண் இன்று உதயமாவார். அப்பெண் பால்வெளியில் கழிக்கும் காலமானது பீடனைக்காலத்திற்கான அடையாளமாகும். அரக்க பாம்பானது, அன்று கிறிஸ்தவர்களை பீடனைகுள்ளாக்கிய உரோமபேரரசை குறிக்கின்றது.

சம்பிராதயத்திற்கு அமைய நோக்கும்போது முதலாவது வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்ட அப்பெண் நேரடியாகவே பாக்கியவதியான தாயாரோடு தொடர்பு படுத்தப்பட்டார். ஆயினும், இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தோடு, பரிசுத்த திருச்சபையின் உருவகமாக பேறுபெற்ற தாயார் முன் வைக்கப்பட்டுள்ளதை காண முடியுமாகிறது. இன்றைய உலகின் பேரில் கண்களை ஏறெடுக்கும்போது, பல்வேறு விதமான பேரரசுகளின் பீடனைக்கு அகப்பட்டுள்ளதை காண்பதற்கு முடிகிறது. அது அரசியல் ரீதியிலான வல்லமையுள்ள நாடாகவும் இருக்கலாம். அதுபோல வர்த்தகப் பேரரசாகவும் இருக்கலாம். மனிதனை பீடனைப்படுத்துகின்ற, அவமானத்திற்கு உள்ளாக்குகின்ற ஊடகப் பேரரசாகவும் அமைந்திருக்கலாம். அப்படியும் அல்லாதுவிடின் சிறு நாடுகளின் நிலை கொண்டுள்ள பெறுமதிமிக்க நற்பண்புகளுடன் கூடிய கலாச்சாரத்தை உடைத்து நொருக்குகின்ற புதிய கலாச்சாரமாகவும் இருக்கலாம். எம் போன்ற ஏழை நாடுகளில் நிலைக்கொண்டுள்ள தொழிலின்மை, போசாக்கு குறைவு, கலாச்சார அழிவு போன்றவற்றிட்கு அந்நிய பேரரசுகளும், அவர்களது பிரதிநிதிகளும் ஆவர். ஆயினும், ஆண்டவர் எப்போதும் ஏழைகளின் பக்கத்தையே எடுக்கின்றார். "**ஏழைகளே நீங்கள் பேறு பெற்றவர்கள்**" என்று இயேசு ஆண்டவர் எம்மை பார்த்து கூறுகின்றார். "**அவர் தம் அடிமையின் தாழ்நிலையை கண் நோக்குகிறார்**" என்று இன்று பேறு பெற்ற தாயார் கூறுகின்றார். பல அருள் வரப் பிரசாதங்கள் கிடைப்பதற்கான காரணம் அவரது தாழ்நிலையாகும் என்றல்லவா அவர் கூறுகின்றார். ஆனபடியால், எமது தாழ்நிலையயை வரப்பிரசாதமான நிலைக்கு உயர்த்தக் கூடுமான இறைவனுக்கு, எமது தாழ்நிலைகள் மீது செயலாற்றுவதற்கு இடமளிப்போம். பேறு பெற்ற தாயாரைப் போல அனைத்தையும் ஆவியானவர்க்கு முடிக்கொள்வதற்கு இடமளிப்போம். மரணத்தை வென்ற இயேசுவோடு மகா உன்னதரை புகழுவோம்.

### செபம்

வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவர் பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்கு தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையை காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார் .....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 16
திங்கள்
*முதலாம் வெளியீடு*
எசேக்கியேல்
24:15-24
*பதிலுரைப்பாடல்*
இணைச்சட்டம்
32:18-21
*நற்செய்தி வெளியீடு*
புனித மத்தேயு
19:16-22

ஹங்கேரி
புனித ஸ்தேவான்
நினைவு

பரி. நற்செய்தி நிகழ்ச்சி

**அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் வந்து "போதகரே நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?" என்று கேட்டார். இயேசு அவரிடம் "நன்மையைப் பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்லவர் ஒருவரே. நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளை கடைபிடியும்" என்றார். அவர் "எவற்றை?" என்றுக் கேட்டார். இயேசு "கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்சான்று சொல்லாதே, தாயையும் தந்தையையும் மதித்து நட, மேலும் உன் மீது நீ அன்பு கூறுவது போல் உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக!' என்று கூறினார். அந்த இளைஞர் அவரிடம் "இவை அனைத்தையும் நான் கடைபிடித்து வந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைப்படுவது என்ன?" என்று கேட்டார். அதற்கு இயேசு "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னை பின்பற்றும்' என்றார்.................. கடிகடிசெல்வர் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது' என்றார்.**

ஒளியின் விழிப்புறுதல்

இயேசு கிறிஸ்துநாதருடைய உள்ளரங்க அனுபவத்திற்கு உள்ளாகும்போது எமக்குள் ஒரு நலவரம் ஏற்படலாம். அது அவர் ஏன் இவ்வாறு வெளிப்படாதிருக்கின்றார் என்பதாகும். ஆனால் அவரது குறிகோள் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே ஆகும். தமது தூதுரைப் பணியை தொடங்கிய கணம்தொட்டு அவர் கூறிய வார்த்தைகள் அவரது வாழ்கை அனுபவமே ஆகும். தமக்குரியவைகளை எல்லாம் விற்று விட்டு தம்மை பின்பற்றுமாறு கூறுவதை இளைஞன் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறான். உலக ஆசைகள் பேரிலான பற்றுதலே அதற்கான காரணங்கள் ஆகும். சட்டங்களை குறைவின்றி கடைப்பிடித்தலின் மூலம் நிறைவாழ்வு உறுதியென்ற நம்பிக்கையுடன் வாழ்ந்த செல்வந்தரின் மனப் பான்மைக்கு சவாலாகின்றது அவரது வழிகாட்டுதல். உலகிற்கு அடிமையாக வாழும் மனிதர் மீட்பை பெறுவது கடினம். தூய ஆவியானவரின் வல்மையிலும், கொடைகளிலும் நிரம்பிய உலக செல்வங்களையும் ஆசைகளையும் வெறுத்து இயேசுவை பின்தொடர்வது இறையரசின் மாட்சிமைக்காக வாழ்வதேயாகும் என்பதை வழியுறுத்தி கூறுகின்றார்.

எமது பேரில்

மனிதன் வாழ வேண்டும் என்பதற்காக வாழ்வுக்கு அடிமையாகலாமா? உலகம் தரும் மகிழ்ச்சிகளையும் புகழ்ச்சிகளையும் ஆசை கொண்டோமேயானால் இறைவனுக்கு உகந்த பணியாளனாக வாழ முடியாது. நாங்களும் கிறிஸ்தவர்கள் என்று பெருமையுடன் சொல்வதில் மாத்திரம் திருப்தி கொள்வோமேயானால் பதில் இறையருளில் இருந்து நாங்கள் பிரிந்தவர்கள் ஆவோம். தூய ஆவியானவர் எம்மில் செயற்பட இடமளித்து இயேசு ஆண்டவருக்கு அடிபணிந்து இறைவனுக்கு உகந்த பணியாளனாக நல்ல கிறிஸ்தவனாக வாழ வரம் வேண்டி தூய ஆவியானவரிடம் செபிப்போம்.

செபத்திற்குள்ளாகுதல்

எமது வாழ்க்கையில் முதலிடம் கொடுத்து செயற்படுவது எதற்கு என்பதைப்பற்றி தெளிவுபடுத்தியருளும் தூய ஆவியானவரே! நான் பற்றிப்பிடித்திருக்கும் குப்பைக் கூலங்களை இனங்கண்டு அவற்றைக் கைவிட்டு உமது இறையரசின் பெறுமதிகளுக்குள்ளாகி வாழ வழிகாட்டியருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 17
செவ்வாய்

*முதலாம் வெளிப்பாடு*
எசேக்கியேல்
28:1-10

*பதிலுரைப்பாடல்*
இணைச்சட்டம்
32:26-28,
30,35-36

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
19:23-30

பரி. நற்செய்தியிலிருந்து

இயேசு தன் சீடரிடம் "செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாக சொல்லுகிறேன். மீண்டும் உங்களுக்கு கூறுகிறேன். செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது' என்றார். சீடர்கள் இதைக்கேட்டு "அப்படி யானால் யார் தான் மீட்படைய முடியும்' என்று கூறி வியப்படைந்தார்கள். இயேசு அவர்களை கூர்ந்து நோக்கி மனதில் "இது முடியாது. ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்' என்றார். அதன் பின்பு பேதுரு இயேசுவைப் பார்த்து...... மேலும் என் பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தை யையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நிலபுலன்க ளையோ விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காக பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப்பேறாக அடைவர். ஆனால் முதன்மையானோர் சிலர் கடைசியாவர். கடைசியானோர் சிலர் முதன்மையாவர் என்று அவர்களிடம் கூறினார்.

ஒளியின் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே இயேசுவின் உள்ளாந்திரத்தை எனக்கு காண்பியும். செல்வந்தர்கள் உலகின் செல்வங்களை அனுபவித்தவாறே சீவிப்பவர்கள். அவர்களை சீடத்துவத்துக்கு அழைப்பது மிக கடினம் என்பதை காண்பிக்கிறார். அவர்கள் தங்கள் செல்வங்களை செலவிட விரும்ப மாட்டார்கள். ஆனால் கடவுளால் அவர்களை மனமாற்றம் செய்ய முடியும் என்கிறார். இப்போது கடவுளுக்குள் இருப்பவர்களும் இருக்கும் நிலைமாறி உலக செல்வங்களை விரும்பிப் போகலாம். அதனால் தான் **முதன்மையானோர் சிலர் கடைசியாவர். கடைசியானோர் சிலர் முதன்மையாவர் என்று அவர்களிடம் கூறினார்.** இவை இறையரசுக்காக தம்மை அர்ப்பணிப்பவரை இறைவன் கடைசி நாளில் மகிமைப்படுத்துவார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

எம் பேரில்

நாம் எந்த அளவுக்கு எம்மை இறை ராஜ்ஜியத்திற்கு அர்ப்பணித்துள்ளோம். எங்களுடைய நேரம் தவிர்ந்து இவைகளை இறைவனுக்கு கொடுக்கிறோமா? இது நாள் வரைக்கும் எங்களால் செய்ய முடியாதவைகளுக்காக இறைவனிடம் மன்னிப்பு கேட்போம். தூய ஆவியானவரே எமது பலவீனங்களை முடிக்கொள்ளும். எம்மை பெலப்படுத்தும்.

செபம்

அன்பின் ஆவியானவரே! எம் துணையாளரே! எங்களை புதுப் படைப்பாக்கியருளும். உடல், எலகம், பசாசின் செயற்பாட்டுக்கு அடிபணியாமல் உம்மை அறிந்து உமது திருவிருப்பத்தை அறிந்து எம்மை அர்ப்பணிக்க வரம் அருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 18
புதன்

*முதலாம் வெளிப்பாடு*
எசேக்கியல்
34:1-11

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
23:1-6

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
20:1-16

பரி. நற்செய்தி நிகழ்ச்சி

**"விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாளர்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார்.......... அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம்தான் பெற்றார்கள். அவர்கள் அதைப்பெற்றுக் கொண்டபோது அந்த நிலக்கிழாருக்கு எதிராக முணுமுணுத்து, "கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணிநேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப்பளுவை யும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே' என்றார்கள். அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, "தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக்கொள்ளவில்லையா? உமக்கு உரியதைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்கு கொடுத்தபடியே கடைசியில் வந்த இருவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பபடி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்கு பொறாமையா?" என்றார். "இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார்.**

ஒளியில் விழிப்புறுதல்

மத்தேயு நற்செய்தியில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள இவ்வுவமையினூடாக இறைவனின் நன்மையும், தியாகமான வாழ்வை வெளிப்படுத்தும் போது சுதந்திரத்துடன் செயற்படுவதையும் காணமுடியும்.

விபசார பெண்ணுக்கு மன்னப்பளிப்பது போன்ற நிகழ்ச்சியும், சிலுவை மரத்தில் தனது வலப்பக்கத்திலிருந்த கள்வனுக்கு மன்னிப்பளித்தல் போன்ற நிகழ்ச்சியும் இறைவனின் நன்மைத் தனத்தையும், தியாக வாழ்வையும், தெளிவாக்குகின்றது. அதை சுதந்திரத்துடன் செய்வதும் தெளிவாகின்றது.

எம்பேரில்

நான் எனது சங்கத்தில் இறைவனைப் போல் சுதந்திரத்துடன் செயற்படுகின்றேனா? எனக்கு என் சங்கம், எனக்கு விருப்பமான, நான் சொல்வதைச் செய்கின்ற ஒரு குழுவைக் கட்டியெழுப்பியுள்ளேனா? அனைவரையும் ஒரே விதமான பராமரிக்க என்னால் முடியுமா? நானும் ஒரு பரிசேயரா? வெளிப்படையாக மாத்திரம் தான் அனைவரோடும் ஒற்றுமையாகின்றேனா? இல்லாவிட்டால் முதலாம் வாசகத்தில் கூறுவதைப் போல் செயற்படுகின்றேனா?

முதலாம் வெளிப்பாடு

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. மானிடா இஸ்ரயேலர்களின் ஆயர்களுக்கு எதிராக இறைவாக்குரை. அவர்களுக்கு இறைவாக்குரைத்துச் சொல். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. தாங்களே மேய்ந்துக் கொள்ளும் இஸ்ராயேலின் ஆயர்களுக்கு ஐயோ கேடு! ஆயர்கள் மந்தையை அன்றோ மேய்க்க வேண்டும்! நீங்கள் கொழுப்பானதை உண்டு ஆட்டு மயிராடையை உடுத்தி மந்தையில் சிறந்ததை அடிக்கிறீர்கள். மந்தையையோ மேய்ப்பதில்லை. நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை. பிணியுற்றவற்றிற்கு குணமளிக்கவில்லை. காயமுற்றவற்றிற்கு கட்டுப் போடவில்லை. வழித் தப்பியவற்றை திரும்பக் கூட்டி வரவில்லை. காணமற் போனவற்றைத் தேடவில்லை. ஆனால் அவற்றை கொடுமையுடனும், வன்முறையுடனும் நடத்தினீர்கள். ஆயன் இல்லாமையால் அவை அழைந்து திரிந்தன. எல்லா காட்டு விலங்குகளுக்கும் அவை இரையாகின.... (34:6-11 வாசிக்கவும்)

செபம்.

இறைவா! உம்மைப் போல் என்னால் செயற்பட முடியவில்லை. பரிசுத்த ஆவியானவரை எனக்கு அனுப்பியருளும். என்னுள் மனுவுருவாகியருளும். அப்பொழுது உமது விருப்பத்தை நிறைவேற்ற என்னால் முடியும்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 19
வியாழன்

முதலாம் வெளிப்பாடு
எசேக்கியேல்
36:23-28

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
51:10-13,16-17

நற்செய்தி வெளிப்பாடு
புனித மத்தேயு
22:1-14

புனித ஜோன் யுட்ஸ்
நினைவு

முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

**நீங்கள் வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்தலில் என் மாபெரும் பெயரை நான் புனிதப்படுத்துவேன். அப்போது உங்கள் வழியாய் அவர்கள் கண்முன்னே என் தூய்மையை நிலைகாட்டும் போது நானே ஆண்டவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்கிறார் தலைவராகிய ஆண்டவர்..........**

பரி. நற்செய்தியிலிருந்து

இயேசு மீண்டும் அவர்களைப் பார்த்து உவமைகள் வாயிலாகப் பேசியது. "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். அரசர் ஒருவர் தம் மகனுக்குத் திருமணம் நடத்தினார். திருமணத்திற்கு அழைப்புப் பெற்றவர்களைக் கூட்டிக் கொண்டு வருமாறு அவர் தம் பணியாளர்களை அனுப்பினார். அவர்களோ வரவிரும்பவில்லை............ (தயவுசெய்து முழுப் பகுதியையும் வாசிக்கவும்)

### ஒளியில் விழிப்புறுதல்

தமது பரிசுத்த நாமம் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாலேயே தீட்டுப்படுத்தப்படுகையில், அவர் (இறைவன்) இறைவாக்கினரான எசேக்கியேல் வழியாக அவர்களை விழிப்புறுத்துகின்றார் போலும். **"கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்"** மனம் வருந்துதலானது மகா உன்னதருக்கு உவப்பானதாகுமென்பதை திருப்பாடல் ஆசிரியரும் உறுதிப்படுத்துகின்றார். அப்பா பிதாவானவரின் திருநாமம் பரிசுத்தமானது என்பதை உரிமையாக்கிக் கொண்டிருந்த இறைமகன் இயேசுவும் **"உமது திருநாமம் பரிசுத்தப்படுவதாக"** என்று தமது சீடருக்கும் போதிக்கின்றார். தந்தையின் திருநாமம் எத்துணை புனிதமானது எனின், அந்த நாமம் வெளிப்பாடாகும் இடமெல்லாம் மகிழ்ச்சி பொங்கி வழியும். அந்த பரிசுத்ததனத்தை அனுபவிப்பதற்காக அழைக்கப்பட்டோர் பலரான போதிலும் தமது விருப்பத்திற்கு, திட்டத்திற்கு இடமளிக்கின்ற, அவரது தேர்ந்து கொள்ளுதலுக்கு ஆயத்தமாக இருக்கின்ற, பதிலளிக்கின்றவர்களே பேறுபெற்றவர்களாவர் என்று இயேசு உவமை வழியாகக் கூறுகின்றார். அந்த வரப்பிரசாதத்தினையும் தூய ஆவியானவரது துணையுடன் தான் அனுபவிப்பதற்கு முடியுமாகும். **"நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைக் கடைப்பிடிக்கவும், என் நீதிநெறிகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன்"**

### எனது புத்திரத்தன்மை

பரிசுத்த தந்தையானவரின் திருநாமத்தைத் தீட்டுப்படுத்திய சந்தர்ப்பங்கள் தான் எத்தனை? அவரது திருவிருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக எனது விருப்பத்தை, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சித்த சந்தர்ப்பங்கள் தான் எத்தனை? பல்லாயிரக்கணக்கான மக்களிடையே இருந்து தேர்ந்து கொள்ளப்பட்ட நான் எனது பெலயீனங்களை, முடியாமைகளை காணுகின்றேனா? ஏற்றுக் கொள்கின்றேனா?

தூய ஆவியானவரே! என்னை எனக்கு அதிகமதிகமாகக் காண்பித்தருளும். நீர் காண்பிக்கின்ற எனது முடியாமைகள், பெலயீனங்களை ஏற்றுக் கொள்வதற்கான வல்லமையை எனக்குத் தந்தருளும். அப்போது நான் தந்தையின் மகளாக / மகனாக வாழ்வேன்.

### நாள் பூராகவும்

- ஆவியானவர் என்னுள் எப்போதும் இருக்கின்றார்
- அவருள் நான் என்றும் இருக்கின்றேன்.
- நேரிய வழியில் நடப்பதற்கு அவர் எனக்கு வழிகாட்டுகின்றார்.
- அனைத்து ஒலிகளும் அவரது ஒலியாகும்.
- ஒலிகள் வாயிலாக வார்த்தைகள் கிடைக்கின்றன என்பதன் பேரில் விழிப்புறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 20
வெள்ளி

*முதலாம் வெளிப்பாடு*
எசேக்கியேல்
37:1-14

*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
107:2-9

*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு
22:34-40

மறை வல்லுனரான
தூய பெர்னாட்
நினைவு

பரி. நற்செய்தி

**இயேசு சதுசேயரை வாயடைக்கச் செய்தார் என்பதைக் கேள்விப்பட்ட பரிசேயர் ஒன்றுகூடி அவரிடம் வந்தனர். அவர்களிடையே இருந்த திருச்சட்ட அறிஞர் ஒருவர் அவரைச் சோதிக்கும் நோக்கத்துடன், 'போதகரே திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?' என்று கேட்டார். அவர் 'உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து' இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை. உன்மீது நீ அன்பு கூறுவது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக' என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை. திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன' என்று பதிலளித்தார்.**

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்பற்ற மனித சமூகத்தை கண்டு கிறிஸ்து வேதனையடைத்திருப்பார். உண்மையாக இறைவனை அன்பு செய்பவன் கண்ணால் காணும் மனிதனையும் நிச்சயம் அன்பு செய்வான். அவரும் தந்தை மேல் கொண்ட அன்பினாலே தான் மனுக்குலத்தை மீட்க மனிதமகனாக மண்ணுலகில் அவதரித்தார். சட்டம் என்ற ரீதியில் மனிதனை மிருகங்களாக எண்ணி வழிநடத்திய பரிசேயருக்கும் சதுயேருக்கு திருச்சட்டத்தாலே பதிலளிக்கின்றார். செய்ததையே அவர் சொன்னதால், அவர் வார்த்தைக்கு வல்லமை இருந்தது. அன்பு என்றால் அர்ப்பணம் **"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு"** திருவள்ளுவர் கிறிஸ்துவின் வாழ்வை குறித்து தான் இவ்வாறு கூறினாரோ?

**அனுபவம்**

நான் பாவிக்கும் பொருட்கள் நேர்த்தியாக இருக்க வேண்டும். இதனால் ஒருசில பொருட்களை மற்றவர்களுக்கு கொடுக்கமாட்டேன். இது எனது பெலவீனமான சுபாவம். இத்தியானத்தை எழுதுவதற்கு ஆயத்தமாகும் வேளை, பக்கத்து வீட்டில் உள்ள ஒரு சகோதரி துணி ஒன்றை வெட்ட கத்தரிக்கோல் கேட்டாள். கூர்மையான கத்தரிக்கோலும் என்னிடமுள்ளது. இரவல் கேட்ட சகோதரி எந்த ஒரு பொருளையும் ஒழுங்காக பாவிக்காதவள். ஆகவே இல்லை என்று கூறுவோமா? அல்லது கூர்மையற்ற கத்தரிக்கோலை கொடுப்போமா? என்று எனது மனம் எண்ணியது. உடனே தூய ஆவியார் என்னுடன் பேசினார். நீ அந்த கத்தரிக்கோலால் துணி வெட்டுவாயா? இதுவா நீ அயலான் மீது காட்டும் அன்பு? என்று கேள்வி கேட்டார். நான் வெட்கித்து போனேன். அவசியமற்ற ஆசைகள் எனக்கு ஏற்படுவதில்லை. அவசியமற்ற பொருட்களை பாவிப்பதில்லை. தேவ அன்னையைப் போல் வெறுமையாகும் அனுபவம் எனக்கு நிறைய உண்டு என கூறும் என்னால் எனது சுபாவங்களிலிருந்து வெறுமையாக அரிதாக இருப்பதை உணர்ந்தேன். ஆவியில் விழிப்புறறேன். நான் கூர்மையான கத்தரிக்கோலையே கொடுத்தேன். விழிப்பூட்டிய ஆவியானவருக்கு நன்றி கூறினேன்.

**செபம்**

கணத்துக்கு கனம் வழிநடத்தும் வல்ல தேவனே! உமது தியாக அன்பை அனுபவித்தும் பல வேளைகளில் சுயநலமாக செயல்படும் என் பெலவீனத்தை மன்னித்தருளும். நீர் சொல்வதை கேட்கும் மகளாக மாத்திரம் இல்லாமல் உம் அன்புக்கு சாட்சியாக வாழ உமது ஜீவனுள்ள ஆவியை தந்து வழிநடத்தும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 21
சனி

முதலாம் வெளிபாடு
எசேக்கியேல்
43:1-7
பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
85:8-13
நற்செய்தி வெளிபாடு
புனித மத்தேயு
23:1-12

திருத்தந்தையான
தூய 10ம் பயஸ்
நினைவு

பரிசுத்த நற்செய்தி

பின்பு இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது: மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர்..... நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வது போல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்ட மாட்டார்கள்..... தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள். தங்கள் மறைநூல் வாசகப்பட்டைகளை அகலமாக்குகிறார்கள்........ சந்தைவெளியில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபீ! என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் 'ரபீ' என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே! நீங்கள் யாவரும் சகோதர சகோதரிகள். இம்மண்ணுலகில்......... உள்ள அனைவருக்கும் தந்தை ஒருவரே! அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்படவேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர். உங்களுக்குள் பெரியவர் உங்களுக்குத் தொண்டனாயிருக்க வேண்டும்........... தாழ்த்துகிறவன் எவரும் உயர்த்தப்பெறுவர்.

ஒளியின் விழிப்புறுதல்

இந்நற்செய்தியில் மறைபொருளை தெளிந்து அறிந்து கொள்வதற்கு எம் ஆருயிர் நண்பராம் தூய ஆவியானவரே எனக்கு வழிகாட்டியருளும். மோயீசனின் சட்டதிட்டங்களை கடைப்பிடித்து வாழ்ந்த, இயேசு ஆண்டவர், தம் சீடர்களுக்கும் சட்டதிட்டங்களை சரிவரக் கடைப்பிடிக்குமாறு கற்றுக்கொடுக்கின்றார். எனவே நீங்கள் பரிசேயரைப் போல் இராது, இவ்வுலக மகிமைக்கு இடம் கொடாமல், முதன்மையான இடங்களை நாடாமல் எல்லோரும் சகோதர சகோதரிகள் என்ற உறவில் வாழ்வதற்கும், இறைத்தந்தையே எங்களுடைய அப்பா என்று கற்றுக் கொடுக்கின்றார். **தம்மைத்தாமே தாழ்த்துகின்றவர்கள் உயர்த்தப்பெறுவர்** என்பதனை தம் சீடருக்குக் கற்றுக் கொடுக்கின்றார்.

இறைவனின் பணியாளர்களை எவரும் வெளிவேடத் தன்மையை ஆடையாக அணிந்து கொள்ளாமல், இறை வார்த்தையை தாமதமாக்கி, தாம் பெற்ற இறை விருப்பின் அனுபவங்களை மாத்திரமே மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகின்றார்.

எம்பேரில்

கிறிஸ்த்துவ மறுமலர்ச்சி மக்களாகிய நாம் சட்டதிட்டங்களுக்கு முதல் இடம் கொடுக்கின்றோம். ஆயினும் நாம் வாழ்கின்றோமா? மற்றவனை வழிநடத்துதலிலே கண்ணும் கருத்துமாய் இருக்கும் நாம் எதனைச் செய்கின்றோம்? **"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"** இந்த முறை வார்த்தையைத் தியானித்து, சிந்தித்து வாழ்வோம்.

செபம்

அன்பின் இறைவா! உமது தூதுரைப்பணியை நிறைவேற்ற அழைப்புப் பெற்ற அனைவரும் இறைவார்த்தையில் வாழ்ந்து இறை மகிமைக்காக வாழ வரம் அளித்தருளும். பாக்கியம் பெற்ற அன்னையைப் போல் எம்மைத் தாழ்த்திக் கொள்வதற்கு தூய ஆவியானவரே! துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 22
ஞாயிறு
*முதலாம் வெளிப்பாடு*
எசாயா.
66:18-21
*பதிலுரைப்பாடல்*
திருப்பாடல்
117:1-2
*இரண்டாம் வெளிபாடு*
எபிரேயர்
12:5-7, 11-13
*நற்செய்தி வெளிபாடு*
புனித லூக்கா
13:22-30
பொது காலத்தின்
21ம் ஞாயிறு

பொதுக்காலத்தில் இருபத்தோராம் ஞாயிறு தினமாகிய இன்றைய நாளுக்குரிய வெளிப்பாடுகள் வழியாக தந்தையின் அரசுக்கான அழைப்பு கிறிஸ்தவ சங்கத்திற்குக் கிடைக்கப்பெறுகிறது. இறைமகன் இயேசு பேரில் மாத்திரம் கண், மனம், இதயத்தை ஏறெடுத்தவாறு **"என் பின்னே வா"** என்ற அழைப்பிற்கும் பதில் அளிப்பதற்கான தாகத்தை ஏற்படுத்திக் கொண்டு அதற்கான வல்லமையை வேண்டுவோம்.

இறையரசுக்காக வேண்டி மக்களைத் திரட்டுவதற்கும் அவர்களிடையே செயற்பட்டவாறு அவர்களைப் பரிசுத்தர்களாக்குவதற்கும், இறை புத்திரத்தன்மையின் மகிமைக்கு உட்படுத்துவதற்குமாக அப்பா தந்தையானவர் செயற்படுகின்றார். அது மாத்திரமன்றி அரசினை உரிமையாக்கிக் கொள்வதற்கும், புத்திரத்தன்மையின் ஆழத்திற்குப் பயணமாவதற்கும் தந்தையின் அன்புக்கு உட்புகுவதற்காக வேண்டி துன்புறுத்தல்கள் ஊடாக எம்மை ஆயத்தப்படுத்துவதையும் காண்பதற்கு முடியுமாகிறது. இவ்வாறம் பூராகவும் முகங்கொடுக்கின்ற, அனுபவிக்கின்ற, எம்மை துண்டாடுகின்ற, எமது போலி உருவத்தை உடைத்து நொறுக்குகின்ற நிகழ்வுகள் ஆண்டவரது அன்பு எம்மை ஊடறுத்துச் செல்வதற்கு இடமளிப்போம். அதற்கான வல்லமையை வேண்டுவோம்.

முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

***அவர்கள் செயல்களையும், எண்ணங்களையும் நான் அறிவேன். பிற இனத்தார், பிறமொழியினர் அனைவரையும் நான் கூட்டிச் சேர்க்க வருவேன். அவர்களும் கூடிவந்து என் மனசாட்சியைக் காண்பார்கள். அவர்களிடையே ஓர் அடையாளத்தை நான் ஏற்படுத்துவேன். அவர்களுள் எஞ்சியிருப்போரை மக்களினத்தாரிடையே அனுப்பி வைப்பேன். அவர்கள் தர்சீசு, பூல், வில்வீரர் வாழும் லூது, தூபால், யாவான், தொலைவிலுள்ள தீவு நாடுகள் ஆகியவற்றுக்குச் செல்வார்கள். இந்நாட்டினர் என் புகழ்ப்பற்றிக் கேள்விப்படாதவர், என் மாட்சியைக் கண்டிராதவர். அவர்களும் என் மாட்சிப் பற்றி மக்களினத்தாருக்கு எடுத்துரைப்பார்கள். அவர் அவர்கள் உங்கள் உறவின் முறையார் அனைவரையும் அனைத்து மக்களினத்தாரிடையே இருந்து ஆண்டவருக்கு அளிக்கும் படையலாகக் கொண்டு சேர்ப்பார்கள். இஸ்ராயேல் மக்கள் தூயக் கலம் ஒன்றில் உணவுப் படையலை ஆண்டவரின் கோவிலுக்கு எடுத்து வருவதுப் போல், அவர்களைக் குதிரைகள், தேர்கள், பல்லாக்குகள், கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றின் மேல் ஏற்றி எருசலேமிலுள்ள என் திரு மலைக்கு அழைத்துவாருங்கள் என்கின்றார் ஆண்டவர்..........***

ஒளியின் விழிப்புறுதல்

அப்பா பிதாவானவருடைய இதயத்தில் இருந்த இறையரசைப் பற்றிய கனவை இனங்கண்டு கொண்ட இறைமகனானவர் தந்தையின் மாட்சிமை தமக்குள்ளும், மக்களுக்குள்ளும் வெளிப்பாடாகும் விதத்தில் செயலாற்றினார். அனைவரினதும் உள்ளத்தை ஆராய்ந்தறிகின்ற ஆண்டவர் மக்களுக்குக் கொடுக்கின்ற அடையாளம் தான் என்பதை இயேசுக் கிறிஸ்துநாதர் உணர்ந்திருப்பார்.

அனைவரையும் ஒன்று சேர்த்து தந்தையை மாட்சிமைப்படுத்துகின்ற நாள் தமது உன்னதமான மரணத்தின் நாளாகும் என்பது பற்றி குறிப்புணர்த்தலாகி இருக்காதா? மரணத்தை தோல்வியடையச் செய்கின்ற உயிர்த்தெழுதலானது தம் வழியாக வெளிப்பாடாகும் என்பதையும் அவர் இனங்கண்டிருப்பார். மனித செயல்கள், எண்ணங்கள், நோக்குகள் என்பனவற்றை மேம்பட்டுச் செல்கின்ற இறையன்பின் வழியாக மனிதனை உரிய இடத்திற்கு எடுத்து வருவதற்காக வேண்டி மனுவுருவெடுத்த அவர், அதன் வழியாகவும் மக்களைத் தந்தையிடம் உயர்த்தினார்.

பரி. நற்செய்தியிலிருந்து

***.........அப்பொழுது ஒருவர் அவரிடம், 'ஆண்டவரே மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா?' என்று***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேட்டார். அதற்கு அவர் அவர்களிடம் கூறியது,' இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்.... இறையாட்சியின் போது கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள்........**

ஒளியின் விழிப்புறுதல்

இயேசுக் கிறிஸ்துநாதர் இறையாட்சியைப் பற்றிய தமது நோக்கினை வெளிப்பாடாக்குகின்றார். "மீட்பை" பற்றிய கேள்விக்கான அவரது பதில் உண்மையாகவே மாபெரும் சவாலாக அமைகின்றது. **"இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்"** அகலமான, வசதியான வாயில்கள், நாம் போட்டுக் கொண்டுள்ள திட்டங்கள், எமது வெளிப்புறச் செயல்கள் போன்றன காரணமாக இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதற்கு முடியுமாகுமென நாம் எண்ணிக் கொண்டிருப்போமேயானால் அதுபற்றி விழிப்புறுவதற்கான கனப்பொழுது வந்துள்ளது. மனம் வருந்துதலோடு திரும்புவதற்கான காலம் வந்துள்ளது. அரசின் உணவை அருந்துவதற்காக வேண்டி, அந்த மாபெரும் நாளினை முன்னிட்டு எல்லா விதங்களிலும் நாம் தயாராக வேண்டியவர்களாக இருக்கின்றோம். நோக்குகள், மனநிலைகள், கொள்கைகள், கொள்கைவாதங்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட பாரம்பரியங்கள் போன்றன யாவற்றையும் கைவிட்டு விட்டு, விருந்துக்கான ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். அதனைப் புறக்கண்களினால் காண்பதற்கு முடியாது. ஆயினும் அதன் ஆழத்தை ஆவியானவரது ஒளியினால் காண்போம். இரண்டாவது வருகையின் போது, நாற்றிசைகளிலிருந்தும் மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள். ஆண்டவர் இயேசு கூறுகின்றார். ஒருவரேனும் குறையாது, அனைவரும் வந்து பந்தியில் அமர்வார்களேயானால் அங்கு ஏற்படும் அக்களிப்பு எத்தகையனதாக இருக்கும்??? நாம் அனைவருமே அதற்கான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம். எம்மால் கூடுமானவற்றைச் செய்வதற்காக விழிப்புறுவோம். அதற்கான வழிகாட்டுதலையும், வல்லமையையும் ஆவியான வரிடம் வேண்டுவோம்.

இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

**........பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை 'வேண்டாம்' எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே. தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார். ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார். திருத்தப்படுவதற்காக துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருந்தாத பிள்ளை உண்டோ?.......**

ஒளியின் விழிப்புறுதல்

பவுலடிகளார் எபிரேய சங்கத்திற்கு விடுக்கும் சவாலானது அவர்களைக் கலவரத்திற்குள்ளாயிருக்கும். சங்கத்திற்குள் பெலவீனங்கள், துன்பகரமான அனுபவங்கள், முடியாமைகள் பல இருந்திருக்கலாம். ஆயினும், உயிருள்ளவராக அவர்கள் மத்தியில் வீற்றிருந்த ஆண்டவர் அவர்களுக்கு வழிகாட்டியவாறு, துன்புறுத்தலின் பாக்கியத்தையும், தண்டனை பெறும்போது கடவுள் அவர்களைக் கண்டித்துத் திருத்துகின்றார் என்பதையும் நினைவுறுத்தியிருப்பார். இறைமகன் இந்த அனுபவத்தை உண்மையாக்கினார். சங்கம வாழ்வின் ஆழம் வெளிப்பாடாகுமிடத்தே துன்புறுத்தலும், மரணமும், உயிர்ப்பும் உண்டு.

''துன்புறுத்தல்'' என்பது இறைமக்களாகிய எமக்கு முணுமுணுப்பதற்கோ, குறை கூறுவதற்கோ காரணமாக அமையாது. புத்திரத்தன்மையின் மாட்சியை வெளிப்படுத்துவதற்கான காரணமாக அமையும். அது மாத்திரமன்றி எம் ஆண்டவர் இயேசு தந்தைக்கு எவ்வாறு அடிபணிந்தாரோ, அவ்வாறு ஆவதற்கு நாமும் அழைக்கப்படுகின்றோம்.

செபம்

இறை தந்தையே, தேவரீரது கண்டித்துத் திருத்துவதன் அன்பினால் எம்மை நிரப்பியவாறு, இறையாட்சியை மென்மேலும் ஆழமாக அனுபவிப்பதற்கும், உமது அரசினைப் பரப்புவதற்கும் என்னையும், எனது சங்கத்தையும் வல்லமைப்படுத்தியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 23
திங்கள்
முதலாம் வெளிப்பாடு
2 தெச.
1:1-5,11-12
பதிலுரைப்பாடல்
திருபாடல்
96:1-5
நற்செய்தி வெளிப்பாடு
புனித மத்தேயு
23:13-22

லீமா நகர்
புனித ரோசா
நினைவு

பரி. நற்செய்தி

**வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே ஐயோ உங்களுக்குக் கேடு. மக்கள் நுழையாதவாறு அவர்கள் முன்பாக விண்ணக வாயிலை அடைத்து விடுகிறீர்கள். நீங்கள் நுழைவதில்லை. நுழைவோரையும் விடுவதில்லை. ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகிறீர்கள். அவ்வாறு சேர்ந்த பின் அவரை உங்களை விட இருமடங்கு நரகத் தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள். குருடரே எது சிறந்தது. காணிக்கையா? காணிக்கையைத் தூயதாக்கும் பலிபீடமா?........** (நற்செய்தியை முழுமையாக வாசிப்போம்)

**ஒளியின் விழிப்புறுதல்**

ஆருயிர் நண்பராம் தூய ஆவியானவரே! எமதருகில் இருந்து எம்மை வழிநடத்துபவரே! வேதனையுடனும் உள்ளக்குமுறலுடனும் செயற்படும் இயேசு ஆண்டவரின் உள்ளரங்க அனுபவத்தினை நாமும் காண எம்மை வழிநடத்தும். இறை அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றுவதே தமது உணவாகக் கொண்ட இயேசு இறை அரசிற்காக வாழ்ந்து, அழிந்து அதை கட்டி எழுப்புவதே தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இறை அரசைக் கட்டி எழுப்பும் போது அவர் எதிர்பார்க்கும் எல்லாச் சவாலுக்கும் முகம் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். அன்று யூதா சமுதாயத்தில் உயர்நிலையில் இருந்து செயற்பட்ட மறைநூல் அறிஞர்கள், பரிசேயர்கள் அவரின் போதனைகளைத் தவறான வழியில் போதித்து தாமும் இறை அரசிற்குள் நுழையாமல், இறை அரசிற்குள் நுழையத் தாகமாக இருப்பவர்களை நுழையவிடாமல் மக்களை குருட்டு வழியில் அழைத்துச் சென்று இறை அப்பாவின் திருசித்தத்திற்கு எதிராகச் செயற்படுவதைக் கண்டு வேதனைப்படுகின்றார். அவர்களைப் பார்த்து வெளிவேடக்காரர்களே, குருட்டு வழிகாட்டிகளே, குருட்டு மடையரே ஐயோ உங்களுக்குக் கேடு என உள்ளக் குமுறலுடன் அவர்களைக் கடிந்து கொள்ளப் பின்வாங்கவில்லை. அவர் ஒருபக்கம் மனித மகனாகவும் மறுபக்கம் இறை-மகனாகவும் செயற்பட்டு இறை அப்பாவை மகிமைப்படுத்துகின்றார். அவர்களின் குருட்டு வழிகாட்டலினால் வேதனைப்படும் மக்களை அவர்களிடமிருந்து மீட்டு இறை அரசை நோக்கி அழைத்துச் செல்வதே அவரின் தூதுப்பணி என்பதைக் காண்கின்றார். அப்பா தந்தையின் விருப்பத்தினை நிறைவேற்றிட தமது உயிரையே தியாகம் செய்ய முன்வந்தார்.

**எமது பேரில்**

இறை அரசிற்கான மக்களாகத் தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே எம்மைத் தேர்ந்து எடுத்த இறை அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றிட நாம் எவ்வளவு தூரம் பங்குகொள்கின்றோம்? எமது சங்கத்தில், பங்கில் பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் போல் வாழவா முற்படுகின்றோம்? சட்டதிட்டங்களுக்கு அடிமைப்பட்டு எமது மகிமைக்காகவா வாழ்கின்றோம்? இயேசுவை ஒரே ஆண்டவராக ஏற்றுக்கொண்ட நாம் இன்றைய சமுதாயத்தில் சத்தியத்திற்கு சாட்சி பகர்பவர்களாகவா வாழ்கின்றோம்? எமது பெலவீனங்களுக்கு விழிப்புறுவோம். ஆழமான செபவாழ்க்கைக்குள்ளாகி அப்பாவின் அன்பினை முழுமையாக அனுபவித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம். இறைவிருப்பத்தை நிறைவேற்றும் மக்களாக வாழ எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

**செபத்திற்குள்ளாகுதல்**

அன்பின் ஆண்டவரே உமது திருக்குமரன் வழியாக உமது இறை அரசிற்காக வாழ்ந்து உமது திருவிருப்பத்தை நிறைவேற்றும் மக்களாக வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்தருளும்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 24
செவ்வாய்
*முதலாம் வெளியாடு*
திரு வெளி.
21:9-14
*பதிலுரைபாடல்*
திருபாடல்
145:10-13,
17-18
*நற்செய்தி வெளியாடு*
புனித யோவான்
1:45-51

திருத்தூதரான
புனித
பர்த்தலமேயு
விழா

பரி. நற்செய்தி நிகழ்ச்சி

**பிலிப்பு நத்தனியேலைப் போய்ப் பார்த்து, 'இறைவாக்கினர்களும் திருச்சட்ட நூலில் மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டு கொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே அவர்' என்றார். அதற்கு நத்தனியேல் 'நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ?' என்று கேட்டார். பிலிப்பு அவரிடம் 'வந்து பாரும்' என்று கூறினார். நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, 'இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடமற்றவர்' என்று அவரைக் குறித்துக் கூறினார். நத்தனியேல். 'என்னை உமக்கு எப்படித் தெரியும்?' என்று அவரிடம் கேட்டார் இயேசு, 'பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு 'நீர் அத்திமரத்தின் கீழ் இருந்தபோதே நான் உம்மைக் கண்டேன்' என்று பதிலளித்தார். நத்தனியேல் அவரைப் பார்த்து, 'ரபீ நீர் இறைமகன்; நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர் என்றார். அதற்கு இயேசு............**

ஒளியின் விழிப்புறுதல்:

தூயவராம் பரிசுத்த ஆவியானவரே இறை திருவுள்ளம் தியானிக்க பெலயீனனான என்னை உம் அருட் கொடைகளினால் முடிக்கொள்ளும். நத்தனியேல் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை அதாவது நாசரேத்தியிலிருந்து நல்லது எதுவும் வரமுடியாது என்று நந்தணியேல் கேட்ட கேள்விக்குப் பிலிப்பு கொடுத்த பதில் "வந்து பாரும்." அப்பொழுது நீராகவே உண்மையைப் புரிந்து கொள்வீர். இயேசுவைச் சந்திக்க நத்தானியேல் வரும் பொழுது, அவரைப் பார்த்து இயேசு கூறிய வார்த்தைகள் அவரை ஆச்சரியத்திற்கு உட்படுத்தியது. இவர் உண்மையான இஸ்ரயேலர். கபடமற்றவர் என்றார் இயேசு. தூய ஆவியினால் ஸ்பரிக்கப்பட்ட நத்தானியேல் துணிவோடு இயேசுவைப் பார்த்து ரபி நீர் இறைமகன் என்று கூறுகின்றார். இதை அரசிற்கான அழைப்பை உதாசீனம் செய்யாமல் அன்புடன் ஏற்று பதில் அளித்த நத்தானியேலின் உள்மனதைக் காணும் இறைதந்தை அவரில் பூரிப்படைகின்றார்.

எம் பேரில்

அன்று இயேசு பிலிப்பைக் கண்டு 'என்னைப் பின் தொடர்ந்து வா' என அழைத்தார். இன்று இயேசு எம்மைப் பார்த்து உன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே உன்னை நான் இறை அரசின் ஊழியனாகத் தெரிவு செய்து வைத்தேன். இதோ உன்னை இன்று என்னைப் பின்தொடர அழைக்கின்றார் என்று கூறுகின்றார். இறை அன்பைச் சுவைக்க தூதுப்பணியின் சேவகனாகப் பெற்ற அழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேனா என் வேதனை சோதனை நோய் துன்பம் சவால்கள் முடியாத் தன்மையுடன் இயேசுவை பின் தொடர ஏற்படும் சவால்களில் விழிப்புறுவோம். பிலிப்பைப் போன்று மற்றவர்களை இயேசுவிடம் அழைத்துச் செல்லவும், இயேசுவில் பிரிந்து வாழ்பவர்களை இணைக்கவும் எமக்கு அழைப்பு உண்டு. இறை அரசைக் கட்டியெழுப்ப எம் பங்கு என்ன? மனவிருப்பத்துடன் செயல்படுவோம்.

செபத்திற்குள்ளாகுதல்

அருட்கொடையாம் தூய ஆவியானவரே! முழு அகிலமும் அசைந்து ஆடித் தம் வல்லமையை மக்களுக்குப் பொழியும் ஆண்டவரே! இறைமகன் இயேசு தமது தூதுப்பணியை நிறைவேற்ற அவருக்குப் பலமாக இருந்த அருளே. நானும் இறைதந்தையின் திருவுளம் நிறைவேற்ற எல்லாவிதக் கஷ்டதுயரங்களுக்கும் முகம் கொடுக்க வல்லமையை தந்தருளும்.

ஆண்டவரே நீர் உருவாக்கிய யாவும் உமக்கு நன்றி செலுத்தும். உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள். தி.பா. 145:10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 25
புதன்
*முதலாம் வெளிபாடு*
2 தெச
3:6-10,16-18
*பதிலுரைபாடல்*
திருபாடல்.
128:1-2, 4,5
*நற்செய்தி வெளிபாடு*
புனித மத்தேயு
23:27-32

புனித லூயி,
கசான்ஸ் நகர்
புனித யோசேப்பு
நினைவு

பரி.நற்செய்தி

**வெளி வேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாகத் தோற்றமளிக்கின்றன: அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லாவகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன. அவ்வாறே நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால் உள்ளேயோ போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள். வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு கேடு. ஏனெனில் நீங்கள் இறைவாக்கினர்களின் கல்லறைகளைக் கட்டுகின்றீர்கள். நேர்மையாளரின் நினைவுச் சின்னங்களை அழகுபடுத்துகிறீர்கள். எங்கள் முதாதையர் காலத்தில் நாங்கள் இருந்திருந்தால் இறைவாக்கினர்களின் கொலைக்கு உடந்தையாக இருந்திருக்க மாட்டோம் என்கிறீர்கள். இவ்வாறு நீங்கள் இறைவாக்கினரைக் கொன்றவர்களின் வழிமரபினர் என்பதற்கு நீங்களே சாட்சிகள். உங்கள் முதாதையர் செய்த கொடுமையின் அளவுக்கு நீங்களும் செய்து முடியுங்கள்.**

ஒளியின் விழிப்புறுதல்

கிறிஸ்து மக்கள் மேல் கொண்ட மனிதநேயம் கோபமாக மாறுவதை இந்நற்செய்தியில் காண முடிகின்றது. அநீதியான வழிநடத்தல் கண்டு சாபமிடுகின்றார். கிறிஸ்து இறைமகனான போதும் மண்ணுலகில் மனிதனாகவே அவதரித்தார். பரிசுத்தமான தந்தையின் திருவிருப்புக்களை மறையை வெளிப்படுத்த ஏன் அவ்விதம் பதிலளித்தார். தேர்ந்து கொண்டவர்களின் தவறான பாதைக்கு திசை திருப்புதலின் காரணம் அல்லவோ? மனித உணர்வுகள் இருந்தது என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்று. அன்பு, கருணை, பரிவு, இரக்கம், நீதி, நேர்மை என்பவை அழிக்கப்படும் போது கோபம், ஆவேசம், சாபமிடல் போன்ற உணர்வுகள் அவரிடம் ஏற்படுகின்றது. இறையரசு இவ்வுலகில் பரவ வேண்டுமென்ற அடிதளமான செயல்பாடு அவரிடம் இருந்தது. அவை சிதைக்கப்படும் போது, கோபம் ஏற்படுகின்றது. இறையரசை பரப்ப வந்த இறைவாக்கினரின் துன்பங்களை எண்ணி வேதனையுறுவதுடன் சுயநலம் கொண்டோரின் செயல்பாடுகளை எதிர்த்து, இறைநீதியை உருவாக்குகின்றார்.

எம்பேரில்

இந்நாட்களில் பல அநீதியான செயல்பாடுகளை கண்டும், கேட்கும் போது மனதிலே இனம்புரியாத வேதனையும் கோபமும் ஏற்படுகின்றது. நீதிக்காக குரல் எழுப்புவோரை பணம் கொடுத்து வாங்குகின்றார்கள் அல்லது அந்நபரையே அழித்து விடுகின்றார்கள். சுதேச குருக்கள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜிப்ரோன் 3 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர முடியாத மக்களுக்கு உதவி செய்தார். இதற்காக பலமதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து நடவடிக்கையை எடுத்தவர் பயணம் செய்தவரை காணவில்லை. இன்றுவரை இறந்தோர் பட்டியலிலும் இல்லை. இருப்பதற்கான எந்த தகவலும் இல்லை. என்னை பொறுத்தவரை அவர் ஒரு இறைவாக்கினர். அன்று கிறிஸ்து அநீதியை எதிர்த்து உயிர்விட்டார். இன்று அவ்வருட் தந்தைக்கும் இந்நிலை தான் ஏற்பட்டிருக்கும். இத்தந்தைக்கு எப்படி இத்துணிவு ஏற்பட்டது. கிறிஸ்துவுக்குள் அவர் வாழ்வு இருந்ததால் இத்துணிவை தூயஆவியானவர் அவருக்கு கொடையாக கொடுத்துள்ளார். எனக்குள் ஏற்பட்ட வேதனை கோபம் என்ற உணர்வில் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தேன். "மறைக்கப்பட்டு புதைக்கப்பட்ட நமது நீதியையும் கிறிஸ்து ஏற்ற வேளையில் வெளிக்கொணர்ந்து எமக்கு உணர்த்துவார் என்றும் அவர் ஏற்ற காலத்தில் இருளையும் வெளிச்சமாக்குவார் அல்லது இருளிலும் வெளிச்சத்தைக் கொண்டு வருவார்" என்ற வாக்குறுதிகள் மனதை ஆறுதல்படுத்துகின்றன.

செபம்

தீமையிலும் நன்மை செய்ய வல்ல தேவனே! நான் வாழும் அநீதியான காலத்தில் உம்மால் நீதியை நிலைநாட்ட முடியும் என்பதை விசுவசிக்கின்றேன். என் விசுவாசம் தளராத வண்ணம் வாழ உமதருளை தாரும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 26

வியாழன்

*முதலாம் வெளிப்பாடு*

1 கொரி

1:1-9

*பதிலுரைப்பாடல்*

திருபாடல்

145:2-7

*நற்செய்தி வெளிபாடு*

புனித மத்தேயு

24:42-51

பரிசுத்த நற்செய்தி

**விழிப்பாயிருங்கள். ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்கு தெரியாது. இரவில் எந்த காவல் வேலையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாள ருக்கு தெரிந்தால் அவர் விழித்திருந்து தம் வீட்டில் கன்னமிட விடமாட்டார் என்பதை அறிவீர்கள். எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் எதிர்பாராத நேரத்தில் மானிட மகன் வருவார். தம் வீட்டு வேலையாட்களுக்கு வேளா வேளை உணவு பராமரித்தலை அமர்த்திய நம்பிக்கைக்குரிய பெரும் அறிவாளியுமான பணியாளர் யார்? தலைவர் வந்து பார்க்கும் போது தம் பணியைச் செய்துக் கொண்டிருப்பவரே அப் பணியாளர். அவர் பேறு பெற்றவர். அவரைத் தம் உடைமைகளுக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். அப்பணியாள் பொல்லாதவனாய் இருந்தால் தன் தலைவர் வரக் காலம் தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக் கொண்டு தன் உடன் பணியாளரை அடிக்கவும் குடிகாரருடன் உண்ணவும் குடிக்கவும் தொடங்குவான். அப்பணியாள் எதிர்பாராத நாளில் அறியாத நேரத்தில் அவனுடைய தலைவர் வருவார். அவர் அவனைக் கண்டத்துண்டமாய் வெட்டி வேடக்காரருக்கு உரிய இடத்துக்குத் தள்ளுவார். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.**

ஒளியின் விழிப்புறுதல்

இன்றைய வெளிப்பாடுகள் தியானத்துடன் வாசிப்பதற்கு ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றுப் மாசற்ற அன்பானவராய் தூய ஆவியானவரே. இயேசுவின் நற்செய்தி நிகழ்வை புரிந்து வாழ வரம் தாரும்.

இன்றைய நற்செய்தி எங்களுக்கு எதை கூறுகின்றது என்றால் இயேசுவின் இரண்டாவது வருகை அந்நாளில் மனிதன் எப்படி இருக்க வேண்டும். என்பதுதான். அதேபோல் இவ்உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆதாம் ஏவாள் செய்த பாவத்தினால் மரணம் நிச்சயம். நாங்கள் அந்த மரணத்திற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தின்படி எங்களுக்கு இவ்வுலக வாழ்வு ஒரு சிறிய காலம். ஆனால் எங்களுக்கு வரப்போகும் வாழ்வே சதாகாலம். இதை பற்றி இன்றைய வாசகத்தில் புனித பவுலும் அவருடைய சகோதரரும் கொரிந்தியாருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் 1:5-9 வசனத்தில் இருக்கின்றது.

ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப் பெற்றுச் சொல்வன்மையும் நிறையறிவும் பெற்று எல்லாவகையிலும் செல்வர்கள் ஆனீர்கள். மேலும் கிறிஸ்துவைப் பற்றிய சான்று உங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படு வதற்காகக் காத்திருக்கும் உங்களுக்கு அருள்கொடை எதிலும் குறைவே இல்லை. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் நீங்கள் குறைச்சொல்லுக்கு ஆளாகாதிருக்க அவர் உங்களை இறுதிவரை உறுதிப்படுத்து வார். கடவுள் நம்பிக்கைக்குரியவர். தம்மகனும் நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற உங்களை அவர் அழைத்துள்ளார்.

எம் பேரில்

இயேசுநாதர் எமது முடிவுவரும் நாளைக்குறித்து சொல்லுகிறார். நம் உள்ளாந்திரத்தை ஆராய்ந்து பாாக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. நாம் முடிவை எதிர்கொள்ள தயாராக இருக்கின்றோமா. இறை விருப்பம் என்ன என்பதை அறிந்து வாழ்கின்றோமா? அவரது விருப்பத்தை நிறைவேற்றுகின்றோமா? அவருக்கு உகந்த மகனாக / மகளாக வாழ்கின்றோமா? எமது அயலவர்களுடன் எமது தொடர்புகள், செயல்கள் எம்மட்டில் இருக்கிறது. இறைவன் இது என்னுடைய அன்பார்ந்த மகன் / மகள் இவரில் நான் பூரிப்படைகிறேன் என்று கூறக்கூடிய வாழ்க்கை வாழ்கின்றோமா? அப்படி இல்லாவிட்டால் நாம் நம்மை மாற்ற வேண்டும். காலம் தாழ்த்த முடியாது. சிந்திப்போம். செயல்படுவோம்.

செபம்

அன்பின் இறைவா எமது முடிவை உம் கரத்தில் ஒப்படைத்து உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை என்ற வார்த்தைக்கு அமைய சொல்லிலும் செயலிலும் தூயவர்களாக வாழ தூய ஆவியை எமக்களித்தருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 27
வெள்ளி

*முதலாம் வெளிப்பாடு*
1 கொரி 1:17-25
*பதிலுரைப்பாடல்*
தி.பா. 33:1-2, 4-5, 10-11
*நற்செய்தி வெளிப்பாடு*
புனித மத்தேயு 25: 1-13

புனித மொனிக்கா நினைவு

பரி. நற்செய்தி நிகழ்ச்சி

அந்நாளில் விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதை பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக விளக்கலாம். மணமகனை எதிர்கொள்ள மணமகளின் தோழியர் பத்துபேர் தங்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுள் ஐந்துபேர் அறிவிலிகள் ஐந்துபேர் முன்மதி உடையவர்கள். அறிவிலிகள் இவரும் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்றார்கள். ஆனால் தங்களோடு எண்ணெய் எடுத்துச் செல்லவில்லை. முன்மதியுடையோர் தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்துச் சென்றனர். மணமகன் வரக்காலந் தாழ்த்தவே அனைவரும் தூக்க மயக்கத்தில் உறங்கிவிட்டனர். நள்ளிரவில் ''இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்'' என்ற உரத்த குரல் ஒலித்தது. மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர்.........

ஒளியின் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! உமது ஒளியினால் எம்மை நிரப்பியருளும். உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன். விழிப்பாயிருங்கள் என்று நம் ஆண்டவர் எம் ஒவ்வொருவரையும் நற்கிரியைகளிலும் பிறரன்பிலும் வாழும்படி அழைப்பு விடுக்கிறார்.

எம் பேரில்

இவ்வுலக வாழ்வு எமக்கு சொந்தமில்லை. இறைவன் தம் மகனிடம் ஒப்படைத்தவர்களை அவர் திரும்பவும் தந்தையிடம் ஒப்படைப்பதே அவரது திட்டமாக இருந்தது. நாம் விரும்பினும் விரும்பாவிடினும் அவர் மணமகனாய் எம்மிடம் வருவார். நாம் எல்லோரும் அவர் வருகைக்காக முன்மதியுள்ள கன்னியர்களைப் போல செம்மறியின் இரத்தத்தால் முத்திரை பதித்தவர்களாய் உள்ளத் தூய்மையுடன் அவரின் திருவுளத்திற்கு ஏற்ப அவர் சொல்வதற்கு மட்டும் செயல்பட்டு வாழ்வோம். எமது வாழ்க்கை என்ற விளக்கிற்கு இறைவார்த்தை என்ற எண்ணெயை விட்டால் தான் ஞானம் என்ற ஒளி வீசும். இறைவார்த்தை செயலாக மாற ஞானம் வேண்டும். ஒளிவீசும் வாழ்வு வாழ எமக்கு கற்றுத் தந்துள்ளார். எம் வாழ்வு ஒளியாக உள்ளதா? இருளாக உள்ளதா? ஒளியாக எம் வாழ்வினை மாற்ற இறைவனிடம் வரம் கேட்போம்.

செபம்

வாழ்வளிக்கும் வல்ல தேவனே. அன்பு மகிழ்ச்சி கீழ்படிவு இரக்கம் சாந்தம் மன்னிக்கும் மனப்பான்மை உள்ளவர்களாய் உமது நறுமண எண்ணெய்களால் நிரம்பி தேவமுரசு கொட்டியபடி வாழ வரம் தாரும்.

ஆண்டவர் சீனாயிலிருந்து வந்தார். சேயிரின் நின்று அவர்களுக்குத் தோன்றினார். பாரான்மலையில் நின்று அவர்கள் மீது ஒளிர்ந்தார். பல்லாயிரம் புனிதர் புடைசூழ வந்தார். அவரது வலப்புறத்தில் நின்று மின்னல் ஒளிர் திருச்சட்டம் ஏந்தி வந்தார். உண்மையாகவே மக்களினங்களின் அன்பர் அவர். இணைசட்டம் 33 : 2 - 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 28
சனி

*முதலாம் வெளியாடு*
1 கொரி 1:26-31

*பதிலுரைபாடல்*
தி.பாடல்
33:12-13,18-21

*நற்செய்தி வெளியாடு*
புனித மத்தேயு
25:14-30

மறை வல்லுனரும்
ஆயருமான
புனித அகுஸ்தின்
நினைவு

முதலாம் வெளிப்பாடு

**எனவே சகோதர சகோதரிகளே! நீங்கள் அழைக்கப்பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள். மனித கணிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்? வலியோர் எத்தனை பேர்? உயர்குடி மக்கள் எத்தனை பேர்? ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். எவரும் கடவுள் முன் பெருமை பாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார். 'பெருமை பாராட்ட விரும்புகின்றவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும்."**

ஒளியின் விழிப்புறுதல்

பெலவீனம் என்று கருதியதை கடவுள் தேர்ந்து கொண்டார். இன்று அகுஸ்தின் புனிதரின் திருநாளாகும். புனிதரின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கையில் மனிதமட்டத்தில் நன்மையானவை அவரிடம் பிறக்குமா? என்னும் கேள்விக்குறி எழுகின்றது. தாய் மொணிக்காவின் இடைவிடாத வேண்டுதலினால், அவரது வாழ்க்கை முழுமையாக மாற்றம் அடைந்தது. பெண்களில் மயங்கி வாழ்ந்தவர் வாழ்வானது, ஆண்டவரால் கவரப்பட்டது. ஆண்டவர் உலகம் வெறுத்தொதுக்கிய பெலவீனனை ஆன்ம' பலசாலியாக்கினார். இறை வேண்டுதலின் ஆற்றலை, வல்லமையை நாம் புரிந்து கொள்வோமாயின் மாபெரும் மனமாற்றங்கள் எம்மத்தியிலும் நிகழுமல்லவா?

இன்றைய நற்செய்தி வழியாக கொடுக்கப்பட்ட தலாந்துகளை உபயோகித்து மென்மேலும் செல்வம் ஈட்டியவர்கள் உவமையை இயேசுநாதர் வெளிப்படுத்துகின்றார். ஆண்டவர் திருவிருப்பை அறிந்தவர்கள் அரசின் வளர்ச்சிக்காக செல்வங்களை அதிகரிக்கச் செய்கின்றார்கள். திருவிருப்பை அறியாதவன் அதனை புதைத்து விட்டு மனம் போன போக்கில் வாழ்ந்தான். இறுதியில் விண்ணரசின் உரிமையை இழந்தான்.

எம்மை நோக்குவோம்

ஆண்டவர் எனக்களித்த திறமைகள் விண்ணரசின் வளர்ச்சிக்காக, அவர் திருவிருப்பத்தை பெருமைப் பெற விரும்பும் எதிர்பார்ப்போடு செய்யப்படுகின்றதா? அல்லது இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக உபயோகிக்கப்படுகின்றதா? அன்றேல் நான் உண்டு, என் குடும்பம் உண்டு என வாழ்கின்றேனா? இறைவா என்னை உம் கருவியாக மாற்றியருளும். ஆமென்.

திருப்பாடலிலிருந்து

தமக்கு அஞ்சி நடப்போரையும், தம் பேரன்பிற்காக காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரை சாவில் நின்று காக்கின்றார். அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார்.

தீர்மானம்

பாவமன்னிப்பின் அருட்சாதனத்தை ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாகிலும் பெறுவதற்கு முன்வருவோம். புனித அகுஸ்தினார் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் கிடைப்பின் அதனை வாசிக்க முன்வருவோம்.

புனித மொனிக்காவின் செபம் ஒரு புனித அகுஸ்தினாரை உருவாக்கியது என்றால் எம் ஆழமான விசுவாச செபத்தாலும் மனமாற்றத்தை உருவாக்கலாம். ஆகவே மனமாற்றத்திற்காக செபிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 29
ஞாயிறு
முதலாம் வெளியாடு
சீராக்
3:17-18, 20,28-29
பதிலுரைபாடல்
திருபாடல்
68:3-6,9-10
இரண்டாம் வாசகம்
எபிரேயர்
12:18-19, 22-24
நற்செய்தி வாசகம்
புனித லூக்கா
14:1,7-14
பொது காலத்தின்
22ம் ஞாயிறு

பொதுக்காலத்தின் இருபத்து இரண்டாம் ஞாயிறு தினமாகும். அப்பாவின் அன்பினால், அரசினால் எப்போதும் நிரம்பியவாறு நிலைத்திருந்த இயேசு ஆண்டவர் எக்காலத்திலும் உவமைகள், கதைகள் போன்றன வழியாக தந்தையின் அரசினைப் பற்றியே கதைத்தார். அரசினை மாபெரும் விருந்திற்கு உதாரணமாகக் காட்டியவாறு, அவ்விருந்தில் பங்குகொள்வதற்காகவே நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். அரசின் பெறுமதி இன்றைய பரிசுத்த நற்செய்தி வழியாக முன்வைக்கப்படுகின்றது. பிரதி பலனைக் கருத்திற் கொள்ளாது, பலனை எதிர்பார்க்காது சங்கம இலட்சணங்களை ஆழமாக்குவதற்கான அழைப்பு மனிதரென்ற வகையில் அது சிரமம் மிக்கதாகும். பிரதிப்பலன் எதிர்பாராத எம் ஆண்டவரது இதயத்தில் குடிகொண்டுள்ளது. இறையரசு எம்மத்தியில் உள்ளது என்பதனை அதனூடாக அனுபவிப்போம்.

### முதலாவது வெளிப்பாடு

**குழந்தாய் நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய், அவ்வாறாயின் கடவுளுக்கு உகந்தோர் உனக்கு அன்பு காட்டுவர். நீ பெரியவனாய் இருக்குமளவுக்குப் பணிந்து நட, அப்போது ஆண்டவர் முன்னிலையில் உனக்குப் பரிவு கிட்டும், ஆண்டவரின் ஆற்றல் பெரிது. ஆயினும், தாழ்ந்தோரால் அவர் மாட்சி பெறுகின்றார். நுண்ணறிவாளர் உவமைகளைப் புரிந்து கொள்வர்; ஞானிகள் கேட்டறியும் ஆவல் மிக்கவர்கள்.**

### ஒளியின் விழிப்புறுதல்

ஆண்டவரது அன்பு எனும் வார்த்தை உலகெங்கும் பரவியுள்ளது. அந்த அன்பு, இரக்கம் அனைத்தினூடாகவும் வழிந்து வருகின்றதென சீராக தெளிவாக்குகின்றார். ஆனபடியினால் அவரது வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கு, இறைமகன் ஆவதற்கு அந்த அன்பின் ஒலிக்குச் செவிமடுக்கவே வேண்டும். இறைமகன் இயேசு தந்தையின் விருப்பத்தை எவ்வாறு நிறைவேற்றினாரோ, அதே போல் தந்தையின் விருப்பத்தை அறிந்து அதனை நிறைவேற்றுவதற்காகவே நாம் அழைக்கப் படுகின்றோம். செவிமடுக்கும் செவி, ஞானம் மிக்கது. அந்த ஞானத்தை எம் ஆண்டவர் இயேசு உரிமையாக்கிக் கொண்டிருக்கின்றார். "ஞானிகள் கேட்டறியும் ஆவல் மிக்கவர்கள்". அது வெறும் வார்த்தை மாத்திரமாகாது. ஆவியானவரினால் கிடைக்கின்ற வரப்பிரசாதமாகும், அது ஒரு பரிசாகும்.

### பரிசுத்த நற்செய்தி வெளிப்பாடு

**ஓய்வுநாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந்தார். அங்கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். விருந்தினர் பந்தியில் முதன்மை யான இடங்களைத் தேர்ந்து கொண்டதை நோக்கிய இயேசு,...... 'ஒருவர் உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், பந்தியில் முதன்மையான இடத்தில் அமராதீர்கள். ஒருவேளை உங்களை விட மதிப்பிற்குரிய ஒருவரையும் அவர் அழைத்திருக்கலாம். உங்களையும் அவரையும் அழைத்தவர் வந்து உங்களிடத்தில், இவருக்கு இடத்தை விட்டுக் கொடுங்கள்' என்பார். அப்பொழுது நீங்கள் வெட்கத்தோடு கடைசி இடத்திற்குப் போக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்க..... போய்க் கடைசி இடத்தில் அமருங்கள்.... அழைத்தவர் வந்து உங்களிடம், கஷநண்பரே, முதல் இடத்திற்கு வாரும்' எனச் சொல்லும்போது உங்களுடன் பந்தியில் அமர்ந்திருக்கும் யாவருக்கும் முன்பாக நீங்கள் பெருமை அடைவீர்கள்.

தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர்ளு தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்... நீர் விருந்து அளிக்கும் போது ஏழைகளையும், உடல் ஊனமுற்றோரையும், பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறு பெற்றவர் ஆவீர்....

ஒளியின் விழிப்புறுதல்

இன்று பலர் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்ள பெருமையையும், மதிப்பையும் தேடித் தேடி அலைகிறார்கள். இது இவ்வுலக வாழ்வுக்கு ஏற்றதாகத் தோன்றினாலும் இதனால் பயன் எதுவுமே இல்லை. இறையரசில் தாழ்ச்சியோடு இருப்பவர்களே பெருமைப்படுத்தப்படுவார்கள். இறையரசின் இலட்சணங்கள் இன்றைய சமுதாயத்திலிருந்து விலகிச் செல்கின்றதை இயேசு காணுகின்றார். மக்கள் உலக பெறுமதிகளுக்கு அடிமைப்படாது இறையரசின் இலட்சணங்களை தங்களது ஆபரணங்களாக அணிந்து கொள்ள வேண்டுமென்பதே ஆண்டவர் இயேசுவின் அபிப்பிராயமாகிறது. ஆகையால் அந்த இலட்சணங்களின் பேரில் மக்களை விழிப்புறுத்துகின்றார். பெருமை, மதிப்பு என்பவற்றைத் தேடுவோர் இருக்க வேண்டிய இடத்தைப் பற்றியும் தெளிவாகக் கூறுகின்றார். ஆண்டவர் தமது அனுபவத்தையே வெளிப்பாடாக்குகின்றார். **"நீங்கள் அழைக்கப்பட்டிருக்கும் போது, போய்க் கடைசி இடத்தில் அமருங்கள்"** அவரது கடைசி இரா உணவும் குறிப்புணர்த்தப்படுகின்றது போலும்.

இரண்டாவது வெளிப்பாடு

.....நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சீயோன் மலை வாழும் கடவுளின் நகர். விண்ணக எருசலேம்... நிறைவு பெற்ற நேர்மையாளர்களோடு சேர்ந்து அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளராகிய இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள்........

ஒளியின் விழிப்புறுதல்

சங்கத்திற்குள் வீற்றிருக்கின்றவரான உயிர்தெழுந்த ஆண்டவர், ஆதிமுதல் தமக்கென்று உரிமையாக்கிக் கொள்ளவிருந்த கடவுள் வீற்றிருக்கின்ற **'வாழும் கடவுளின் நகர்'** அல்லது விண்ணக எருசலேமுக்கு வந்துள்ளார். அங்கு இறையாளுமை, அவரது விருப்பம், திட்டம் செயற்பாடாகின்றது. மனித வரையறைகள் பரவலாகி, ஆண்டவரை என்றும், எப்போதும் காணுகின்ற, சந்திக்கின்ற அனுபவிக்கின்ற வாழ்வுக்கான உரிமை கிடைத்துள்ளது. புதிய உடன்பாட்டின் இணைப்பாளராம் அவர் எப்போதும் சங்கத்தை தந்தைபால் உயர்த்துகின்றார். புத்திரத் தன்மையின் சிகரத்திற்கு வந்தபோது ஆழமான விடுதலை. சுதந்திரத்தோடு ஆம் என்று கூறுதல். இறைமகிமை, மாட்சிமை என்பன பொங்கி வழிகின்ற எதிர்பார்ப்பின் நிலையாகும்.

செபம்

அன்பான தந்தையே, எனது புகழுக்காகச் சேவை செய்வதைக் கைவிட்டு விட்டு உமது அரசிற்காக என்னையே இழப்பதற்கான விழிப்புறுதலையும், தாகத்தையும் தந்தருளும்.

நாள் பூராகவும்

"பிரதிபலன் எதிர்பார்க்காத அன்பில் தான் ஆண்டவர் குடிகொள்கிறார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 30
திங்கள்
முதலாம் வெளிபாடு
1 கொரி
2:1-5
பதிலுரை பாடல்
திருபாடல்.
119:97-102
நற்செய்தி வெளிபாடு
புனித லூக்கா
4:16-30

பரிசுத்த நற்செய்தி நிகழ்ச்சி.

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின்படி ஓய்வுநாளில் தொழுகை கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறைவாக்கினர் ஏசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப் பிரித்த போது கண்ட பகுதியில் இவ்வாறு எழுதியிருந்தது. ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். பின்னர் அந்த ஏட்டைச் சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகை கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கியிருந்தன.....

ஒளியின் விழிப்புறுதல்

கிறிஸ்துநாதருக்குத் தாம் உலகிற்கு வந்த நோக்கம் தெளிவாகத் தெரியும். தாம் உலகிற்கு வந்ததன் நோக்கத்தை எசாயாவின் சுருள் ஏட்டின் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றார். மக்கள் அதை விளங்கி கொள்ளவில்லை என்பதும் கிறிஸ்துவுக்கு தெரியும். தன்னை யார் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தமது தூதுச்சேவையை ஆவியின் வழிநடத்தலின் படி செய்கின்றார். மனிதர்கள் தன்னை வரவேற்று புகழுமிடத்திலும் தங்கவில்லை புகழ்ச்சியை இட்டு இறுமாப்புக் கொள்ளவில்லை. அதேப் போல தன்னை ஏற்றுக்கொள்ளாத இடத்திலும் கலக்கமுறவில்லை. மாறுகின்ற மனித அன்பைவிட, மாறாத தந்தையின் அன்பிலே நிறைவை காண்கின்றார். நாம் நிறைவு காண்பது எதில் என்பதையிட்டு சிந்திப்போமா?

எம்பேரில்.

இறைவன் என்னோடு இருக்கின்றார். நானும் அவருக்குள் இருக்கின்றேன் என்ற நற்செய்தி எனக்கும் கிடைத்துள்ளது. இவ் அனுபவத்தை சிலரோடு பகிரும் போது சிலர் ஏற்றுக் கொண்டதும் உண்டு. பலர் ஏற்றுக் கொள்ளாததும் உண்டு. கண்களால் காண்பதை மட்டுமே நம்பும் மனிதர்கள் காணமுடியாத விசுவாச அறிக்கையை புறக்கணிப்பது விந்தையல்லவே, பிரபல்யமான நடிகர் ரஜனிகாந் ஒரு பேட்டியில் "சந்தோஷம் வரும் போகும். நிம்மதி நிரந்தரமானது. இந் நிரந்தர நிம்மதியைத் தேடி நான் வருடத்துக்கு ஒருமுறை இமயமலை செல்வேன்" என்று கூறியுள்ளார். எம் கிறிஸ்து தம்மை விசுவசிப்பவர்கள் அனைவருக்கும் நிலையான அமைதி, நிம்மதியை இலவசமாக தருகின்றார். கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து எனது வாழ்வில் எத்தனையோ இன்பங்கள், துன்பங்கள் வந்து சென்றதுண்டு. ஆனால் அவை என் நிம்மதியை அழித்ததில்லை. நான் அவரது கரத்தை பற்றி பிடிக்கவில்லை. அவரே என் கரத்தைப் பிடித்து நடத்துவதால் பயமில்லாமல் இருக்கின்றேன். அவருள் நான் இருப்பதால் அவர் என்னை செயல்படுத்துகின்றார். இது நான் வாழ்ந்து கொண்டிருக்கும் நற்செய்தி. நீங்களும் கிறிஸ்துவை விசுவசியுங்கள். ஆண்டவராக முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். அவருள் வாழும் வழியை கற்று தருவார். கண்ணிருந்து குருடரைப் போல் மாய உலகில் வாழ்கின்ற சிறையிலே அகப்பட்டு அல்லலுறும் மக்களுக்காக இறைவன் முன் தோன்றி நிற்போம். நாம் அனுபவித்த இறையன்பை அனைவரும் பெற மன்றாடுவோம்.

செபம்

என்னை கரம் பிடித்து வழிநடத்தும் நல்ல தெய்வமே! என் வாழ்நாள் முழுவதும் உமது விருப்பத்தின்படி வாழ என்னை பெலப்படுத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆவணி 31

செவ்வாய்

*முதலாம் வாசகம்*

1 கொரி

2:10-16

*பதிலுரை பாடல்*

தி.பா.

145:8-14

*நற்செய்தி வெளிபாடு*

பு.லூக்

4:31-37

பரி நற்செய்தி நிகழ்ச்சி

**பின்பு இயேசு கலிலேயாவிலுள்ள கப்பர்நாகூம் ஊருக்குச் சென்று, ஓய்வு நாள்களில் மக்களுக்குக் கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் அதிகாரத்தோடு கற்பித்தார். தொழுகைக்கூடத்தில் தீய ஆவியான பேய் பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த பேய் 'ஐயோ' நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை?.... என்று உரத்த குரலில் கத்தியது. 'வாயை மூடு இவரை விட்டு வெளியே போ' என்று இயேசு அதனை அதட்டினார். அப்பொழுது பேய் பிடித்தவரை அவர்கள் நடுவே விழச்செய்து அவருக்கு ஒரு தீங்கும் இழைக்காமல் பேய் அவரை விட்டு வெளியேறிற்று....** (முழுமையாக வாசிக்கவும்)

ஒளியில் விழிப்புறுதல்

அன்பின் வல்லமையாளராம் தூய ஆவியானவரே! என்னை முழுமையாக மூடி, அன்பின் இயேசுவின் உள்ளத்தைப் புரிந்திட எனக்கு உதவி புரிந்தருளும், பேய் பிடித்த ஒருவரை குணமாக்கும் வல்ல சம்பவமொன்று இன்றைய நற்செய்தி வெளிப்பாடாக அமைந்திருக்கின்றது. தொழுகைக் கூடத்தில் போதித்துக் கொண்டிருந்த இயேசு ஆண்டவரின் போதனையைக் கேட்டு வியப்புற்ற மக்களுக்கு, அவர் பயங்கரமான பேயை குணமாக்கியதை நேரில் கண்டதும் எவ்வாறு இருந்திருக்கும். அதிலும் பேய் இயேசுவை இனங்கண்டு அவரிடம் கோரிக்கை விடுப்பதைப் பார்க்கையில் எவ்வாறு திகைப்புக்குள்ளாகியிருப்பார்கள். அதன் காரணமாகவே அவரைப் பற்றிய பேச்சு சுற்றுப்புறமெங்கும் பரவுகிறது. தூய ஆவியானவர் வழியாகவே இயேசு இவ்வாறான அரும் பெரும் காரியங்களைப் புரிந்துள்ளார். இன்றைய 1ம் வெளிப்பாட்டில் கூட தூய ஆவியரின் செயல்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை புனித பவுல் அடிகளார் விளக்கி இருக்கிறார். தூய ஆவியரின் ஆளுமைக்கு நாம் உட்படுகையில் மனித ஞானத்தால் அல்ல இறை ஞானத்தாலேயே நாம் வழிநடத்தப்படுவோம் என்றும் கூறுகிறார்.

எமது பக்கம்

தூய ஆவியின் வழியாக விசேட அழைப்பை பெற்றுள்ளோம் என்று கூறும் நாம், அவ் ஆவியின் வழிநடத்துதல் வழியாகவா, செயல் படுகிறோம். எமது சொற்கள் ஆவியரின் சொற்களாகவா அமைந்துள்ளன, தீய ஆவியான பேய் இயேசுவை அறிந்த அளவிற்கு எம்மால் அவரை அவரது சொல், செயல் என்பவற்றின் வல்லமையை அறிய உணர முடிகிறதா? மனித இயல்பு கொண்டவர்களாகவா இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஏதாவது ஒரு சிறு மாற்றம், ஆவியின் செயல்பாடு எம்மிடம் ஏற்பட்டுள்ளதா?

செபம்

அன்பின் ஆவியானவரே! ஆண்டவர் ஆண்டவர் என்று கூறிக்கொண்டிருக்கும் எம்மில் மற்றவர்கள் உம்மைக் கண்டிட தூய ஆவியின் வழியாக எம்முள் புதியன புகுத்திடவும் பழையன கழித்திடவும் துணை புரிந்தருளும். எமது வாழ்வின் வழியாக மற்றவர்கள் உமது வல்லமையை கண்டிடவும், பயனுள்ள கருவியாக நாம் மாறிடவும் உமது வல்லமையுள்ள ஆவியால் நிரப்பி எம்மை வழி நடத்தியருளும்.
ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ....................................................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ..........................................................................................

..................................................................................................................................................

..................ஆம் ஆண்டு........................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா.................................ஐ........... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

..............................................

திகதி :....................................                                        கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

பன்னிரெண்டு மாதங்கள்-          ரூ. 220.00

* காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.

* பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)

* புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.

தொலைபேசி : 011-2230300 ப/க்ஸ் : 011-2231490

மின்தபால்(நு-அயடை): ழகககைஉநஞிரடிரனரறய.ழசப

றுநடிளவைந : றறற. ரடிரனரறய.ழசப

அச்சகம் : புபுது அச்சகம்,

452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.

தொலைபேசி : 011-2958439 நு.ஆயடை :

ரடிரனரிசநளளஞபஅயடை.உழஅ

* பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை

ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.

தொலைபேசி : 011-2230300

* சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :

- * ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
- * ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
- * புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
- * புபுது நிவச, தங்கொட்டுவ.
- * புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
- * கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
- * 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப் படக்கதை

பேறு பெற்ற தாயின் செபத்தின் பயணம் அவருடைய ஆத்ம சரீரத்துடன் இறைவன் அண்டையில் சேர்வதுடன் முடிவடைகின்றது.

மனுவுருவாகிய பரிசுத்த திருத்துவத்தின் இரண்டாம் இடத்தை வகிக்கும் கிறிஸ்துநாதர் உயிர்த்த உடலுடன் இறைவன் மடியில் இருக்கின்றார்.

பேறு பெற்ற தாய் எம்மைப் போலவே மனித மகள் ஆவாள். அதேப்போல மனுவுருவாகிய இறைமகனின் தாய் ஆவாள். ஆகையால் பரிசுத்த திருத்துவத்தின் நிலைப்பாடு முன்னிலையில் அவள் ''இறைத்தாய்'' ஆகும். பாக்கியத்தை பெற்று எதற்கும் ஒப்பிட முடியாத நிலையை வகிக்கின்றாள்.

**தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை. செவிக்கு எட்டவில்லை. மனித உள்ளமும் அதை அறியவில்லை.**

(I கொரிந்தியர் 2:9)

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org